★ பக்கங்கள் 8 விலை சதம் 40

ஈழநாடு

EELANADU

மலர் 21 மார்கழி 12 ஸபர் 7 இதழ் 318
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 27-12-79

புதுவருட அன்பளிப்பு

புதுவருட தினத்திற்குள் அண்ணா கோப்பி அரைறாத்தலுக்கு மேல் வாங்குபவர்களுக்கு அழகிய மார்க்கற்றிங் பாக் இனாமாக வழங்கப்படும்.

அண்ணா தொழிலகம்

நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
போன்: 7413
நவீன சந்தை, சுன்னாகம்

நியூ கேம்பிறிட்ஜ்
டியூடோறியல் இன்ஸ்ரிரியூட்
திருநெல்வேலி சந்தி

1980-ம் ஆண்டிற்கான புதிய வகுப்புக்கள் 01-01-1980ல் ஆரம்பிக்கப்படும்.

நடைபெறுகின்றது
வர்த்தகம்) GCE A/L APRIL) 80,
விஞ்ஞானம்) ARGUST) 81
விபரங்கட்கு:
V. M. பாக்கியநாதன்

SRI LANKA
RECEIVED
1979-12-26
PERIODICALS DIVISION
LIBRARY

இந்திய தேர்தல்களம்

சூறுவளி வேகத்தில் தலைவர்கள் பிரசாரம்

ஜனதா-இந்திரா காங்கிரஸ் செல்வாக்கு அதிகரிப்பு

புதுடில்லி, டிச, 26

இந்திய நாடாளுமன்றத்துக்கான தேர்தல் நடைபெறுவதற்கு இன்னும் சில தினங்களே எஞ்சியிருப்பதால் போட்டியில் இறங்கியுள்ள கட்சிகளின் பிரசாரவேலைகள் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளன.

தேசியக்கட்சியின் முக்கிய தலைவர்கள் நாடுமுழுவதும் சூறுவளி வேகத்தில் சுற்றுப்பிரயாணங்களை மேற்கொண்டு தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதற்கிடையில் மத்தியில் இப்போது பதவியிலுள்ள திரு சரண்சிங்கின் லோக்தள் கட்சிக்கு செல்வாக்கு குறைந்து வருவதாகவும் அக்கட்சியின் கட்டணி தலைவர்களுக்கிடையிலேயே கருத்துவேறுபாடு தோன்றியுள்ளதாகவும் கருதப்படுகின்றது.

லோக்தள் கட்சியுடன் கூட்டரசு அமைத்துக்கொண்ட காங்கிரஸ்கட்சி மெதுவாக தனது ஆதரவை விலக்கிக் கொண்டுவருகிறது. இந்திரா காங்கிரஸ் பல இடங்களில் லோக்தள் கட்சிக்கு எதிராக வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது.

இதேசமயம் திரு ஜகஜீவன்ராம் தலைமையிலான ஜனதா கட்சிக்கு லோக்தள் கட்சியைவிட அதிக ஆதரவு ஏற்பட்டு வருவதாகவும் உத்திபூர்வ காங்கிரஸ் கட்சியும்

(8-ம் பக்கம் பார்க்க)

விவசாய பீடத்துக்கு

கிளிநொச்சி பொருத்தம்!

லோகநாதன் கருத்து

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவாக அமையவிருக்கும் விவசாயபீடம் கிளிநொச்சியில் அமைவது சாலப் பொருத்தமாகவிருக்கும் என்று பொருளாதார நிபுணரும் முன்னாள் இலங்கை வங்கி ஆளுநருமான திரு சி லோகநாதன் கருத்து வெளியிட்டார்

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் பணம் பொருள் அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கில் உரையாற்றிய லோகநாதனிடம் பார்வையாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சாத்தியமானால் முழு பல்கலைக்கழகமே கிளிநொச்சிப் பகுதியில் அமைவதைத் தான் விரும்புவதாக திரு. லோகநாதன் சொன்னார்,

புங்குடுதீவு கொள்ளை:

பெண் உட்பட 7 பேர் கைது

ஜனவரி 3-ல் அடையாள அணிவகுப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் உள்ள வீடொன்றில் புகுந்து வீட்டிலுள்ளவர்களை பயங்கர ஆயுதம் காட்டிப் பயமுறுத்தி 96 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டது சம்பந்தமாக மேலும் ஒருவர் கிளிநொச்சியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் இக்கொள்ளை சம்பந்தமாக ஒரு பெண் உட்பட இதுவரை ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளன

(8-ம் பக்கம் பார்க்க)

இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

350 FG (2தொன்) 550 FG (3தொன்)
900 FG (5 தொன்)

வான், லொறிகள்
பார்வைக்கு விடப்பட்டிருக்கின்றன

திறமையான வாகனங்களைத்தான் நாம் தருவோம்

கீழ் குறிப்பிட்டிருக்கும் இருகாரணங்களால் நாம் அதனை உறுதிப்படுத்துவோம்

(1) எம்மால் நேரடியாக மிகவும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டு, திறமையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்டன.

(2) இங்கிலாந்திலுள்ள எமதுபிரதிநிதிகளின் வாக்கு உங்களுக்கு நாம் தரும் உறுதி மொழி.

விபரங்கட்கு தொடர்புகொள்ளுங்கள்

துரை 'ஆர்.ஜி.பில்டிங்' 66, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம் - தொலைபேசி: 7750.

கணவனுடன் ஸ்கூட்டரில் சென்றமனைவிவிபத்தில்பலி!

(யாழ்ப்பாணம்)

கணவனுடன் ஸ்கூட்டரில் சென்ற மனைவி விபத்தில் பலியானார். இவர்கள் சென்ற ஸ்கூட்டரும் போக்குவரத்து பஸ் ஒன்றும் மோதுண்டதால் இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இவ்விபத்து நேற்று பிற்பகல் யாழ் பிரதானவீதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்திற்கு எதிரில் நடந்தது.

விபத்தில் மரணமான கொடிகாமத்தைச் சேர்ந்த புவனேஸ்வரி (ஆசிரியர்) தனது கணவனான வேலாயுதபிள்ளையுடன் ஸ்கூட்டரில் சென்று கொண்டிருக்கையிலேயே இவ் விபத்து நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது:

விபத்துக்குள்ளானவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தங்களுடைய சொந்த ஊரான கொடிகாமத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கையிலேயே இவ் விபத்து நடைபெற்றதாம்.

விபத்துக்குள்ளான புவனேஸ்வரியை அச்சமயம் அவ் வீதியால் காரில் வந்த பிரிகேடியர் வீரதுங்க யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்று ஒப்படைத்துள்ளார். கணவனுக்கு சிறுகாயம் ஏற்பட்டது.

இதுசம்பந்தமான புலன் விசாரணையை யாழ் பொலிசார் மேற்கொண்டுவருகின்றனர்?

[கொ]

ரோட்டறிக் கழக விசேட முத்திரை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

ரோட்டறிக் கழகத்தின் 75-வது ஆண்டு நிறைவமுன்னிட்டு விசேட தபால் முத்திரை இன்று காலை 9-30 மணிக்கு யாழ் எம் பி திரு வெ. யோகேஸ்வரனால் யாழ் பிரதம தபால் நிலையத்தில் வெளியிட்டு வைக்கப்படும்.

அ.தி.மு.க.வுக்கு கொள்கையில் அக்கறையில்லையாம்

தமிழ்நாட்டில் இந்திரா தேர்தல்பிரசாரம்

(பாண்டிச்சேரி)

பாண்டிச்சேரியின் தனித் தன்மை பேணப்படும் என்ற ஜவஹர்லால் நேருவின் உறுதிமொழியை காங்கிரஸ் ஐ கட்சியின் தலைவரும் முன்னாள் இந்தியப் பிரதமமந்திரியுமான திருமதி இந்திரா காந்தி பாண்டிச்சேரியில் கூறினார்

தமிழ்நாட்டில் இரண்டுநாள் தேர்தல் பிரச்சாரத்துக்காக வந்துள்ள திருமதி இந்திரா காந்தி பல இடங்களில் சொற்பொழிவு நிகழ்த்தினார். இத் தக் கூட்டங்களில் தி மு க தலைவர் திரு. மு கருணாநிதியும் கலந்துகொண்டு பேசினார்.

பாண்டிச்சேரியில் திருமதி காந்தி பேசுகையில் பாண்டிச்சேரியின் தனித்தன்மை பேணப்பட வேண்டும் என [illegible] ஆட்சியில் இருந்தபோது பல்கலைக்கழகமொன்றையும் அனல் மின் நிலையமொன்றையும் நிறுவ ஆலோசித்திருந்ததாகவும் ஆனால் ஜனதா கட்சி அது பற்றி அக்கறை காட்டவில்லை என்றும் கூறினார்.

அனைத்திந்திய அ தி மு கழகம் இரட்டைப் பேச்சை கொண்டிருப்பதாகவும் கொள்கைகள், திட்டங்கள் எதிலும் அக்கறை இல்லையென்றும் திருமதி காந்தி கூறினார்.

"ஈழநாடு"

இந்திய தேர்தல் போட்டி
5000 ரூபாவை
பணமாகவும், பரிசுகளாகவும் வழங்குகின்றோம்!

1-ம் பரிசு.........ரூ. 500-00

2-ம் பரிசு..........ரூ. 300-00

3-ம் பரிசு ...... ரூ. 300-00

இவற்றுடன்

நாலாயிரம் ரூபா பெறுமதியான இருபத்தேழு கவர்ச்சிமிகு பரிசுகளும் உங்களைக் காத்திருக்கின்றன!

யார், யார் என்ன பரிசுகள் வழங்குகின்றார்கள்?

பெறுமதி வாய்ந்த பரிசுகளைக் கொண்ட 'பரிசு மூடை'யை ஒருதரம் இங்கே 'அவிழ்த்து'க் கொட்டுகின்றோம், அவதானியுங்கள்!

1-ம் பரிசு:

த பினான்ஸ் கம்பனி லிமிட் (யாழ். கிளை) வழங்கும் ரூ. 500 பெறுமதியான சேமிப்பு முதலீட்டு வவுச்சர். அல்லது அவர்களின் சந்தைப்படுத்தும் பகுதியில் 500 ரூபாவுக்குப் பெறுமதியான பொருள்கள். இவற்றில் ஒன்றை முதற்பரிசு பெறுபவர் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

2-ம் பரிசு:

எஸ். இராஜதுரை அன் பிறதர்ஸ் (கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்) ஸ்தாபனத்தார் முந்நூறு ரூபா ரொக்கப் பரிசு வழங்குகின்றார்கள்.

3-ம் பரிசு:

யாழ்ப்பாணக் கஸ்தூரியார் வீதியிலுள்ள கே. கே. வி யாழ்ப்பாண நகை மாளிகை ஸ்தாபனத்தாரும்; யாழ். ஸ்டான்லி வீதியிலுள்ள கல்வி சக்தி ஸ்தாபனத்தாரும் இணைந்து முந்நூறு ரூபா ரொக்கப் பரிசு வழங்குகின்றனர்.

இம்மூன்று பரிசுகள் தவிர்ந்த நாலாயிரம் ரூபா பெறுமதி பெறும் ஏனைய இருபத்தேழு கவர்ச்சி மிகு ஆறுதல் பரிசுகளும், அவற்றை வழங்கும் யாழ்ப்பாண வர்த்தகப் பிரமுகர்களும் வருமாறு!

(1) எஸ் சுலைமான் கண்டு அன்ட் பிறதர்ஸ் - மின்னியக்க சவரக் கருவி, (2) டிக்சா வாச் வேர்க்ஸ் - மேசை மணிக்கூடு. (3) நியூ விக்ரேர்ஸ் - வானொலி, [4] எ வே ரூ எலெக்ரிக்கல்ஸ் - மின் கல்கியூலேட்டர், [5] ரவி கோப்பி பார் - ஆறு எவர்சில்வர் கோப்பைகள், [6] தாமோதர விலாஸ் - மின்சார இஸ்திரிக்கை, [7] நியூட்டோன் எலெக்ரிக்கல்ஸ் - மின் அடுப்பு. [8] எம்மோ ஸல்வி - மின் மேசை விளக்கு. [9] அன்னு கோப்பி - வெள்ளித்தட்டு. [10] மலேசியன் றெக்கோடிங் சேர்விஸ் - பாடல்கள் பதிவு பெற்ற மூன்று கசெற்றுகள், [11] விமாஸ் - தேநீர் செற், [12] மூமதலி அப்துலலி - வெள்ளித்தட்டம். [13] கணேசன் ஸ்டோர்ஸ் - சிங்கப்பூர் நைலக்ஸ் சேலை [14] பாரத் ஸ்ருடியோ - பெரிய அளவிலான வெளிநாட்டு "அல்பம்" [15] கல்பனாஸ் - சிங்கப்பூர் நைலக்ஸ் சேலை, [16] செ. சிவபாத விலாஸ் - ஒருசோடி குத்து விளக்கு. [17] நியூபல் டெயிலறிங் மார்ட் - 80x20 ஷேர்ட், [18] ஜெஸிமா பிக்ஸர் பலஸ் - குளியலறைக் கண்ணாடி. [19] எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் - நூறு ரூபா ரொக்கப் பணம், [20] இருபா கில்ற் ஹவுஸ் - பெறுமதி வாய்ந்த பரிசுப் பொட்டலம், [21] நாதன் ஸ்டோர்ஸ் - நூறு ரூபா ரொக்கப் பணம், [22] ஆ. க. கனகசபாபதி அன்ட் சன்ஸ் - நூறு ரூபா ரொக்கப்பணம், [23] கே. எஸ். எம். மீரான் சாஹிப் - எவர் சில்வர் பாத்திரங்கள், [24] வி. கே. ராஜரத்தினம் - மின்சார மேசை விளக்கு, [25] மலாயன் றேடியோ சேர்விஸ் - மின்சார மேசை விளக்கு. [26] செ. சண்முகராஜா பிறதர்ஸ் - மூன்று டின்கள் மோல்டாவா, [27] லைவ்வே ஏஜன்ஸிஸ் - சோடி குத்துவிளக்கு.

இந்தப் பரிசுகளைப் பெற நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவரும் இந்தியத் தேர்தல் கூப்பனிலுள்ள கேள்விகளைப் படித்து, ஊகித்து சரியான விடையை 'போல்பொயின்ற்' பேனாவில் எழுதி கத்தரித்து எமக்கு அனுப்புங்கள் கூப்பனை தபாலட்டையில் ஒட்டி அனுப்புவது உங்களுக்கும் எமக்கும் உதவியாக இருக்கும் ஒருவர் எத்தனை விடைகளையும் அனுப்பலாம் ஆனால் ஒவ்வொரு விடையுடனும் ஒவ்வொரு கூப்பன் இணைக்கப்பட வேண்டும்.

'ஈழநாடு' பத்திரிகையில் அடிக்கடி வெளிவரும் இந்தியத் தேர்தல் பற்றிய கட்டுரைகளைப் படியுங்கள். அவை உங்களுக்கு உதவியாக இருக்கும்.

உங்களது கூப்பன்களை நீங்கள் 'ஈழநாடு' அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் தேர்தல் பெட்டியில் நேரில் வந்தும் போடலாம் முடிவு திகதி 31-12-1979.

ரூ. 33,000 நகை திருட்டு:
இருவர் கைது
நகைகளும் மீட்பு!

(யாழ்ப்பாணம்)

சுமார் முப்பத்து மூவாயிரம் ரூபா பெறுமதியான நகைத் திருட்டு சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டு, நகைகள் பொலிசாரால் மீட்கப்பட்ட சம்பவம் தொண்டமனாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திற்கு அருகாமையில் நடைபெற்றது.

தொண்டமானாற்றைச் சேர்ந்த குமாரசாமி செந்திமணி என்பவர் வல்வெட்டித்துறைப் பொலிஸில் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து புலன் விசாரணையில் ஈடுபட்ட பொலிசார் சந்தேகத்தின் பேரில் மாசிலாமணி சிவநேசன் என்பவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்திய போது களவாக திருடப்பட்ட பொருட்களை வல்வெட்டித்துறையில் உள்ள வீடொன்றிலிருந்து பொலிசார் மீட்டனர். இத்திருட்டு சம்பந்தமாக ரேஸ் என்றழைக்கப்படும் பெண்மணி ஒருவரும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறைப் பொலிசைச் சேர்ந்த இந்திரேசு தலைமையில் சென்ற பொலிசாரே மேற்படி சந்தேக நபர்களைக் கைதுசெய்ததுடன் பொருட்களையும் மீட்டனர். சந்தேக நபர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (செ)

'கடகடப்பு' புதியசஞ்சிகை

(யாழ்ப்பாணம்)

'கடகடப்பு' என்ற பெயரில் மாத சஞ்சிகையொன்று வெளிவரவிருக்கிறது. பெருமளவில் மாணவ எழுத்தாளர்களின் கூட்டு முயற்சியில் வெளிவரவிருக்கும் இச் சஞ்சிகையின் வெளியீட்டு விழா நாளை மாலை [illegible] யில் இடம் பெறும். இதன் ஆசிரியராக செல்வன் வி. சந்திரகுமார் கடமையாற்றுவார்.

மட்டக்களப்பு யாழ்.சேவை

(மட்டுநகர்)

யாழ்ப்பாணம் மட்டக்களப்பு செல்வோரின் நலன் கருதி மீண்டும் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் தனியார் கார் பஸ் சேவை மட்டும் தான் நடைபெறுகின்றது

வழமையாக யாழ் — மட்டக்களப்புக்கு காலையும் மாலையும் இரு பஸ் சேவைகள் நடைபெற்றுவந்தன ஆனால் மழை, வெள்ளம் காரணமாக இச்சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டன

எனினும் பிரயாணிகள் நலன் கருதி இ. போ. ச. வினர் காலை பஸ் சேவையை மட்டும் நடத்திவருகின்றனர்.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்திற்கு வாராந்தம் செல்வோரின் நலன்கருதி சகல வசதிகளுடன் உல்லாச பஸ் சேவை ஒன்றை மட்டக்களப்பில் ஒரு தனியார் நிறுவனம் நடாத்த முன்வந்துள்ளது

அடுத்த வருடம் முதல் சேவையில் ஈடுபடும் இப்பஸ் சேவை விடுமுறைக்கு முதல் நாள் இரவு மட்டக்களப்பிலிருந்து புறப்படும். மீண்டும் விடுமுறை முடிவு பெறும் நாள் இரவு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும். இந்த சொகுசு சேவையிலும் கட்டணம் 5-7 ரூபாய் வரை வித்தியாசம் ஏற்படும் என நிர்வாகி தெரிவித்தார்.

மன்னார் பஸ்நிலையம்

(மன்னார்)

மன்னார் புதிய பஸ் நிலையத்திற்கான நிர்மாண வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மன்னார் பொலிஸ் நிலையத்தின் பின்புறமாக உள்ள அரசாங்க காணியில் இப் புதிய பஸ்நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

வரி விளம்பரம்

தேவை

நல்ல ஆங்கில, கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை நேரில் வரவும் ஜேம்ஸ் டிஸ்பென்சரி. யாழ்ப்பாணம். 4480

40—50 வயதுடைய காவலாளி ஒருவர் தேவை காவல் படைகளிலிருந்து இளைப்பாறியவர் விரும்பத்தக்கது நற்சாட்சிப்பத்திரங்களுடன் 29-12-79 க்கு முன் விண்ணப்பிக்கவும் பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை 25, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் 4487

நல்லூர் கிராமாட்சி மன்றம்
வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1980

மேற்கூறிய விடயம் சம்பந்தமாக 18-12-1979-ந் திகதிய ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த அறிவித்தல் சார்பாக விண்ணப்பத் திகதி 7-1-1980-ந் திகதி வரை நீடிக்கப்படுகின்றது

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
நல்லூர் கிராமசபை.

கிராமசபை அலுவலகம்,
திருநெல்வேலி,
25-12-1979. 4491

நாளை நடைபெறும் கரோல் சேவை
வாணவேடிக்கையும் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

நத்தாரைக் கொண்டாட்டத்தையொட்டி யாழ் நகரில் பெரிய அளவில் கரோல் சேவையும் வாணவேடிக்கைகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன

யாழ் பொலிசாரும் யாழ் நகரின் முக்கியஸ்தர்களும் சகல சமூக ஸ்தாபனங்களும் ஒன்றிணைந்து நடாத்தும் கரோல் சேவை நாளை வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும். சகல மதத்தவர்களும் கலந்து கொள்ளும் சர்வமத கரோல் சேவையில் கொழும்பிலிருந்து வரும் விசேட பாண்ட் வாத்தியக் கோஷ்டியும் பங்குபற்றும்.

கரோல் சேவையின் பின்னர் கொழும்பையும் நீர்கொழும்பையும் சேர்ந்த வாணவெடி உற்பத்தியாளர்களின் வாணவேடிக்கையும் இடம்பெறும்.

கரோல் நிகழ்ச்சியையொட்டி சகல இடங்களுக்கும் செல்வதற்கு விசேட பஸ் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (செ)

ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற ஈ. 9/411 இலக்க வழக்கில் வாதி இணுவில் கிழக்கு வைத்திலிங்கம் மகன் நாகரத்தினத்துக்கு விற்பனவு திகதி வரை போகவேண்டிய தீர்வைத்தொகை 7175 ரூபா 20 சதமும் வழக்குச்செலவு 529 ரூபா 35 சதமும் பின் ஏற்பட்ட விற்பனவுச் செலவுகளும் இதில் செலுத்தப்பட்ட ரூபா 3000/- கழித்து மிகுதித் தொகையை பிரதிவாதிகளாகிய சுதுமலை கிழக்கு கைரமுத்து சுப்பிரமணியத்திடமும் பெண் புவனேஸ்வரியிடமும் அறவிடுவதற்காக எனக்களித்த அதிகாரத்தின் படி வழக்கில் சம்பந்தப்பட்ட [வடமாகாண யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "குளிகிட்டி" நில பர 3 7/8 ஆளும் ஆட்சி அளவுப்படி நில பர 4 1/2, வட மேற்குக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும் வீடும் தலைவாயிலும் பயிர்களும். புதிய கிணறும் கல்வீடும் இதன் எல்லைகளாவன கிழக்கு பெரியதம்பி இராசலிங்கமும் பங்காளரும் வடக்கும் மேற்கும் கதிரித்தம்பி விசுவலிங்கம், தெற்கு றோட் இவ் எல்லைகளுள் இதைச் சேர்ந்தவைகளும்.

இவ்வாதனம் 18-1-1980 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணி தொடக்கம் இக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்;

வி. செ. குட்டிப்பிள்ளை,
விற்பனை ஆணையாளர்.

643, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம். 4493

வீடுகள் கையளிப்பு

(பண்டத்தரிப்பு)

கல்லுண்டாய் குடியேற்றத் திட்டத்திலுள்ள 16 அரசாங்க வீடுகளையும் அதில் வாடகைக்கு குடியிருப்பவர்களுக்கு நிரந்தரமாக எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து கையளிப்பதற்கு மானிப்பாய் கிராமசபை விசேட ஆணையாளரும், வலி மேற்கு உதவி அரசாங்க அதிபருமான திரு. ஏ. செல்வநாயகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்

25 ரூபா வாடகை செலுத்தி அரசாங்க வீடுகளில் குடியிருக்கும் வீடற்ற மக்களுக்கு அவர்கள் வசித்துவரும் வீடுகளை நிரந்தரமாகக் கையளிக்க வேண்டும் என்று சமீபத்தில் உள்ளூராட்சி, வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சு விடுத்த பணிப்புரையின் பிரகாரம் கல்லுண்டாய்க் குடியேற்றத்திட்டத்தில் உள்ள மேற்படி வீடுகள் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காரை. மணிவாசகர் விழா நாளை ஆரம்பம்

தமிழகப்பேராசிரியர் கலந்துகொள்வார்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவெம்பாவைக் காலத்தில் வருடாந்தம் நடாத்தப்பட்டு வருகின்ற மணிவாசகர்விழா இவ்வாண்டு இருபத்தைந்தாவது முறை வெகு சிறப்புற நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் சபையினர் செய்து முடித்துள்ளனர். நாளை 28-ந் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து ஐந்து தினங்களுக்கு நடைபெறவிருக்கும் இவ்விழாவினை ஆரம்பித்து வைத்து சிறப்புச் சொற்பொழிவாற்றும் பொருட்டு தமிழகத்திலிருந்து தருமையாதீனம் பல்கலைக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் முத்தமிழ் அரசு சைவச் செம்மல் திரு. வித்துவான் இரா. செல்வக்கணபதியும் அவரது துணைவியார் புலவர் சந்திரா செல்வக்கணபதியும் வருகை தரவுள்ளனர்.

காரைநகர் ஈழத்துச்சிதம்பர வாசல் மண்டபத்தில் நடைபெறவுள்ள இவ்விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகள் இரா. செல்வக்கணபதி தலைமையில் நடைபெறும். புலவர் சந்திரா செல்வக்கணபதி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் உரையாற்றுவார்கள்.

இரண்டாம் நாள் சனிக்கிழமை

இரண்டாம் நாள் சனிக்கிழமை நிகழ்ச்சிகள் யாழ் பல்கலைக்கழக மெய்யியல் துறைப் பேராசிரியர் கலாநிதி வே இராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். புலவர் சந்திரா செல்வக்கணபதி "ஒரு ஆழ் நோக்குப் பாடல்" என்னும் பொருள் பற்றியும் "தேன் பிலிற்றும் திருப்பூக்கள்" என்பது பற்றி வித்துவான் இரா செல்வக்கணபதியும் உரையாற்றுவார்கள்.

மூன்றாம் நாள் ஞாயிற்றுக்கிழமை

மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மணிவாசகசபை காப்பாளர் வித்துவான் க முருகவேல் தலைமையில் நடைபெறும். அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் 'சோலை இன்பம்' பற்றியும், சந்திரா செல்வக்கணபதி 'ஒரு மறக்கவியலாப் பெண்மை' பற்றியும், வித்துவான் இரா செல்வக்கணபதி "ஒரு சொல்லிற் பிறந்த வீச்சு' என்னும் பொருள் பற்றியும் உரையாற்றுவார்கள்.

நான்காம் நாள் நிகழ்ச்சிகள்

நான்காம்நாள் நிகழ்ச்சிகள் இம்மாதம் 30-ந் திகதி திங்கட்கிழமை யாழ் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் நா சுப்பிரமணிய ஐயர் தலைமையில் நடைபெறும். 'ஒரு குறளுக்கு மறுப்பு' என்னும் விடயம் பற்றி புலவர் சந்திரா செல்வக்கணபதியும் 'வாசகத்துக்கு ஓர் வைப்பூ' என்னும் தலைப்பில் வித்துவான் இரா செல்வக்கணபதியும் உரையாற்றுவர்

இறுதி நாள் நிகழ்ச்சிகள்

இறுதி நாள் நிகழ்ச்சிகள் மறுநாள் மணிவாசகர் சபைத் தலைவர் பண்டிதர் க வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறும் புலவர் சந்திரா செல்வக்கணபதி, வித்துவான் செல்வக்கணபதி ஆகியோரைப் பாராட்டி பலர் உரையாற்றுவார்கள். (கு

மக்கள் கருத்து

விண்ணப்ப முடிவு திகதியை நீடிப்பார்களா?

சென்ற மாதம் கடைசி வாரத்தில் வட இலங்கை சங்கீதசபையினர் 1980ம் ஆண்டு சங்கீதப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரினார்கள். அதில் விண்ணப்ப முடிவு திகதி 31-12-79 என இருந்தது. இதில் விண்ணப்பப்பத்திரத்தில் மாணவர்களுக்கு உறுதிப்படுத்தப்படும் இடம் கல்லூரி அதிபர்களால் என்பதே முக்கியமானது. ஆனால் பாடசாலைகள் மூன்றும் தவணைக்காக 5-12-79 தவணை விடுமுறை விடப்பட்டுள்ளது. மீண்டும் 16 1-80ல் ஆரம்பமாகும். இந்தக் காலத்தில் அதிபர்களையோ ஆசிரியர்களையோ சந்திப்பது கஷ்டமாகவுள்ளது. இதனால் பல மாணவிகள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிலர் விண்ணப்பங்களை பூர்த்தி செய்யமுடியாது கஷ்டப்படுகின்றார்கள்.

எல்லாவற்றையும் விட மிகவும் கஷ்டமானது 31-12-79க்கு முன் கிடைக்கும் விண்ணப்பத்துக்கு உரிய கட்டணத்துடன் மேலதிகமாக 5 ரூபா கட்டவேண்டும் என்பது. 2ம், 3-ம் தரத்து மேற்பட்ட பகுதிகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் அதிபரின் சிபார்சு பெற முடியாததுமல்லாமல், 16-1-80 கல்லூரி ஆரம்பமாகும்வரை காத்திருக்கவேண்டியுள்ளது. ஆகவே முழு விண்ணப்ப முடிவு திகதி [illegible] 1-80 ஆகும். ஆகையால் தயவு செய்து இதற்கான தவணையை நீடித்தால் கஷ்டமில்லாது பிள்ளைகள் பரீட்சைக்குத் தோற்ற உதவியாக இருக்கும்

எம். எஸ். இராஜகுலசிங்கம்
42 [illegible],
யாழ்ப்பாணம்

* * *

கல்வி அமைச்சைப் பாராட்டுவோம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்- வாழ்க்கை வரலாறும் போதனைகளும் என்னும் இரு நூலை மும்மொழிகளிலும் வெளியிடுவதை கல்வி அமைச்சினைப் பாராட்டுகிறோம். கல்வி அமைச்சரின் இத்தகைய முயற்சி தொடருமாயின், தமிழ்ப் பெரியார்கள் நாட்டிற்குச் செய்த தொண்டினை, பிற மக்களும் தெரிந்துகொள்ளவும், அதன் பயனாக அமைதியும், ஒற்றுமையும் வளர்க்கவும் வாய்ப்புண்டாகும்

எஸ். பீ. கிருஷ்ணர்
அம்மன் ச. ச. நிலையம்,
தென் மட்டுவில்.

அடுத்தாண்டுக்குரிய வேலைத்திட்டங்கள்

9, 10, 11-ல் ஆசிரியர் கடமைபுரிவர்

(உடுப்பிட்டி)

1980ம் ஆண்டு ஜனவரி மாதம் 9, 10, 11ம் திகதிகள் ஆசிரியர்களுக்குப் பாடசாலை நாட்களாகக் கணிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றிச் சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. 1980ம் ஆண்டுக்குரிய வேலைத்திட்டங்களை குறிப்பிட்ட மூன்று தினங்களிலும் தயாரிக்கவேண்டும் என்றும் பணிக்கப்பட்டுள்ளது.

நிலவரவு இடாப்புக்களை தயார் செய்தல், இலவசப் பாடப் புத்தகங்கள் பங்கீடு செய்தல்பற்றிய சகல வேலைகளையும் செய்தல், பொது நேரசூசி வகுப்பு நேரசூசிகள், தனிப்பட்ட ஆசிரியர் நேரசூசிகள், பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர் பட்டியல் போன்றவற்றைத் தயாரித்தல், வகுப்புப் பாடப் பதிவுப் புத்தகம், புள்ளிப் பதிவேடு என்பன தயாரித்தல் புறவேலைகள் சம்பந்தமான தவணைகளின் அட்டவணை தயாரித்தல், சமய விளையாட்டு இலக்கிய, விழாக்களைப் பற்றிய பாடசாலைத் தினங்கள் பற்றிய ஒழுங்கமைப்புத் திட்டமிடல். பாடசாலைக் கட்டிடங்கள், வகுப்பறைகள், பாடசாலைத் தோட்டம் முதலியவற்றைத் துப்பரவாக்கவும், ஒழுங்காகவும் வைத்திருப்பதற்குரிய ஒழுங்கட்டவணை தயாரித்தல் க பொ த சாதாரணதர உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு தேசிய சேவைத் திட்டம் தயாரித்தல்.

மேற்கூறிய வேலைகளை இம்மூன்று தினங்களிலும் பிரஸ்தாப ஆசிரியர்கள் மேற்கொள்ளுவர்.

அங்கிகாரம்

(உடுப்பிட்டி)

வல்வெட்டித்துறை நகராண்மன்றத்தின் 1980ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டம் நகராண்மன்றத்தின் மாதாந்தக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வரவு செலவுத் திட்டத்தில் அடுத்தாண்டு 9,18,700 ரூபா வருமானமாகவும், 9,13,320 ரூபா செலவினமாகவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நகராண்மன்றத் தலைவர் திரு எஸ். ஞானமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

“ஒக்டோபர் புரட்சியில் லெனினுடன் உழைத்தவர்”

(யாழ்ப்பாணம்)

மகத்தான ஒக்டோபர் புரட்சியில் லெனினின் நெருங்கிய சகாவாக புரட்சிப் பணிகளில் ஈடுபட்டு பின்னர் சோவியத் மக்களினதும் அரசினதும் கீர்த்திமிக்க தலைவராக 30 ஆண்டுகள் செயல்பட்டு முழு உலக மக்களினதும் விடுதலைவிரும்பிகளதும் ஆதர்ஸ புருஷராக ஸ்டாலின் திகழ்ந்தார்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி (மார்க்ஸிஸ்ட்-லெனினிஸ்ட்) வடபிரதேசக் கமிட்டியால் நடாத்தப்பட்ட ஸ்டாலின் நூற்றாண்டுதினக் கூட்டத்தில் பேசிய கட்சியின் செயலாளர் குழு உறுப்பினர் திரு வி ஏ கந்தசாமி தெரிவித்தார்.

யாழ் ஆஸ்பத்திரி உயர் கல்விக் கல்லூரி மண்டபத்தில் திரு சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் ஸ்டாலினால் எழுதப்பட்ட ‘‘தொழிலாளி வர்க்கமும் தொழிலாளி வர்க்கக் கட்சியும்’’ என்ற நூலையும் திரு வி ஏ கந்தசாமி வெளியிட்டு வைத்தார். நூலின் முதற்பிரதியை வட இலங்கை தெங்கு பனம்பொருள் உற்பத்தித் தொழிலாளர் சம்மேளனத்தின் செயலாளர் திரு மு முத்தையா பெற்றுக்கொண்டார்.

திரு கந்தசாமி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

‘‘இரண்டாவது உலகமகா யுத்தத்தில் ஹிட்லர் தலைமையிலான நாஜிப் படைகள் ஒருபுறமும், ஜப்பானிய ராணுவ வெறியர்கள் மறுபுறமுமாக உலகம் முழுவதையும் ஆதிக்கம் செய்ய நாசகார யுத்தத்தில் அதிரடிப்படைகளாக செயல்பட்டபோது அவைத் தடுத்து நிறுத்தி, முற்றுமுழுதாக தோற்கடித்ததில் சோவியத் மக்களுக்கும் செஞ்சேனைக்கும் தலைமைதாங்கி வெற்றி ஈட்டிச் சென்று முழு மனிதகுலத்தையும் பாதுகாத்ததில் ஸ்டாலினின் புகழ் வரலாற்றில் என்றும் அழிக்க முடியாதது. இதன்விளைவாக தனிஒருநாட்டில் இருந்த சோஷலிச அமைப்பு உலக அமைப்பாக மாறியதுடன் எண்ணற்ற நாடுகள் ஏகாதிபத்திய நுகத்தடியைத் தூக்கி எறிந்து தேசிய விடுதலைப் பதாகையை உயர்த்திப் பிடிக்க வழிபிறந்தது.

ஸ்டாலினின் மறைவின் பின்னர் அதிகாரத்தைக் கவர்ந்துகொண்ட குருஷேவ், அவரை நிராகரணம் செய்யப் புறப்பட்டு சோவியத் நாட்டிலேயே அநாகரிகமாக அழிவுநேரிட்டது. அதேநேரத்தில் ஸ்டாலினின் நாமம் சோவியத் மக்கள் உள்ளிட்ட அனைத்துலக புரட்சிகர மக்களின் இதயங்களில் என்றும் அழியாத உன்னத இடத்தைப் பெற்றுள்ளது. நாம் ஸ்டாலின் காலநினைவுகளாலும் அவரின் வழிகாட்டலாலும் எமது நாட்டின் முற்றுமுழுதான விடுதலைக்கு நம்மை அர்ப்பணிப்பதே நாம் அவரின் நினைவை முன்கொண்டு செல்வதற்கான மார்க்கமாகும்.’’

கூட்டத்தில் திருவாளர்கள் இ வே துரைரத்தினம், இ சண்முகநாதன் ஆகியோரும் பேசினர் (சொ-கு)

கிழக்குப் பிரதேச நாடகவிழா

(கொழும்பு)

இலங்கைக் கலாச்சாரப் பேரவை நடாத்தும் கிழக்குப் பிரதேச நாடகவிழா ஜனவரி மாதம் 5ம் 6ம் திகதிகளில் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும்.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இவ்விழாவில் தினசரி இரண்டு நாடகங்கள் மேடையேற்றப்படும் என்று தமிழ் நாடக ஆலோசனைக் குழுத் தலைவர் கலாநிதி ஆ சந்திரையா தெரிவித்தார்.

இவ்விழாவில் நீதியமைச்சர் திரு கே டபிள்யு தேவநாயகமும், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செ இராசதுரையும் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (வெ)

இலங்கையின் குடிசனப் பிரச்னை

தி வெற்றிவேலுப்பிள்ளை பி. ஏ. (சிறப்பு)

ஒரு நாட்டில் வாழும் மக்கள் தொகை தொடர்பாக பிரச்னைகள் ஏற்படலாம். சில நாடுகளில் மக்கள்தொகை நாட்டின் தேவையிலும் பார்க்கக் கூடுதலாக இருக்கும், இதனால் சில பிரச்னைகள் ஏற்படுகின்றன. சனப்பெருக்கம் அதிகமாகவுள்ள நாடுகளை மிகைக் குடித்தொகை நாடுகள் எனப் புவியியலாளர் அழைப்பர். இலங்கையிலும் இப்பிரச்னை மிக முக்கியமான பிரச்னையாகக் காணப்படுகின்றது. வேறுசில நாடுகளில் சனத்தொகை நாட்டின் தேவையிலும் பார்க்கக்குறைவாகவும் இருக்கின்றது. அவை குறை குடித்தொகை எனப்படுகின்றன. மிகக் குடித்தொகைப் பிரச்னை நாட்டின் பிறப்பு வீதம் இறப்பு வீதம் என்பன தொடர்பாக அமையும். இறப்பு வீதம் குறைந்து பிறப்பு வீதம் கூடினால், சனத்தொகை பெருகும், இவ்வாறான ஒரு நிலை சனத்தொகைப் பெருக்கத்திற்குக் காரணமாகின்றது.

குடிசனப்பெருக்கம்

ஒரு நாட்டின் சனத்தொகைப் பெருக்கம் இயற்கைப் பெருக்கமாகவோ, நகர்வும் பெருக்கமாகவோ இருத்தல் கூடும். இயற்கைப் பெருக்கம் என்பது ஒரு நாட்டின் இறப்பு வீதத்திற்கும் பிறப்பு வீதத்திற்குமிடையிலான வேறுபாடுகளினால் அமையும். இறப்புவீதம் குறைந்து பிறப்புவீதம் கூடினால் சனத்தொகைப்பெருக்கம் கூடும். இறப்புவீதம்கூடி பிறப்புவீதம் குறைந்தால் சனத்தொகைப் பெருக்கம் குறையும்! இலங்கையில் குடிசனப் பெருக்கம் 1945ம் ஆண்டின் பின்னரே அதிகரித்தது மலேரியா நோய் ஒழிக்கப்பட்டமையினால் இலங்கையில் சடுதியாக இறப்பு[illegible] வீழ்ச்சியடைந்தது பின்னர் இல[illegible] வீதம் குறைந்த

கூடியது இன்றும் இந்நிலையே இலங்கையில் நிலவுவது குறிப்பிடத்தக்கது.

சனத்தொகையின் இரண்டாவது பெருக்கம் நகர்வுப் பெருக்கமாகும். இப்பெருக்கம் குடிவரவு, குடியகல்வு என்பவற்றின் வேறுபாட்டினால் நிர்ணயிக்கப்படுவதாகும். குடிவரவு குறைந்து குடியகல்வு கூடினால் குடிசனப் பெருக்கம் குறையும். குடிவரவு அதிகரித்து, குடியகல்வு குறைந்தால் குடிசனப்பெருக்கம் அதிகரிக்கும்.

இலங்கையில் குடிநகர்வும் பெருக்கம் முக்கியமானதாக [illegible] 1840ல் பெருந் [illegible] திறக்கப்பட்ட [illegible] அடிப்படை [illegible] தொழி[illegible] சந்தேசடிகிய [illegible] பெருக்கம் அதி[illegible] 1871ல் இலங்கை [illegible] பார்க்க)

"குடும்பநலனுக்கு திட்டம் அவசியம்"

ஆசிரியருக்கான கருத்தரங்கில் பேராசிரியர் வலியுறுத்து

(அரியாலை)

"நாடு முழுவதும் மேற்கொள்ளப்படும் குடும்பத் திட்டத்தினால் தாய், சேய், அவர்களின் குடும்பம், அவர்கள் வாழும் நாடு என்பன நன்மையடைகின்றன. குடும்பத்திட்ட வழிவகைகளில் கருத்தடை முறையே முக்கிய இடத்தைப் பெறுகின்றது. சனத்தொகையைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் பெண்களுக்குத்தான் மிக முக்கியமானதென்ற எண்ணம் மிகவும் பாதகமானதாகும். ஆண்களும் பெண்களும் குடும்பங்களை அமைக்க எவ்வளவு முக்கியமானவர்களாக இருக்கிறார்களோ அதைப்போல சனத்தொகையைக் கட்டுப்படுத்தும் முயற்சியிலும் அவர்கள் முக்கியமானவர்களாவர். இருபகுதியினரும் குடும்பத்திட்ட முறைகளைக் கைக்கொள்ளுவது மிகவும் நல்லதாக அமையும்."

இவ்வாறு யாழ்ப்பாண மருத்துவபீடப் பேராசிரியர் வைத்தியகலாநிதி செ. சிவஞானசுந்தரம் (நந்தி) யாழ் பல்தொழில்நுட்பக் கல்லூரி மண்டபத்தில் ஆசிரியர்களுக்கென நடாத்தப்பட்ட கருத்தரங்கில் "குடும்பத்திட்ட முறைகளும் நுட்பங்களும்" என்ற விடயம் குறித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சிரேஷ்ட தொழில் அதிகாரி திரு. ச. யோகராசா தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் வைத்தியகலாநிதி சிவஞானசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் "கருத்தடை முறைகளை ஆண்களும் பெண்களும் கைக்கொள்ளும்போது இவற்றின்மூலம் உடல்நலம் பாதிக்கப்படாமலும் குடும்ப சந்தோஷம் குறைவடையாமலும், நமது சமூகத்தின் பண்பும் கலாச்சாரமும் பாதிப்படையாமலும் எல்லோரும் ஏற்கத்தக்கமுறையாகவும் அமையவேண்டும். கணவனும் மனைவியும் இருவரும் தமக்குள் கலந்து பேசி ஒரு குழந்தை பிறந்த பின் மற்றக் குழந்தை எத்தனை வருடங்கள் கழித்துப் பிறக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் கருத்தடை முறையைத் தற்காலிகமாக மேற்கொள்வது நல்லது. இரண்டு அல்லது மூன்று குழந்தைகளின் பின்னர் இருவரும் நிரந்தரமுறையைக் கைக்கொள்வது நல்லதாக அமையும். குடும்பத்திட்ட முறை கையாளப்படும்போது தாயின் சுகம் கவனமாகப் பேணவேண்டும். குடும்பத்தில் பெருகி வரும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டுமென்று விரும்பும் பல குடும்பப் பெண்கள் அதற்கான வழிமுறைகளை அறியாதவர்களாக இருப்பதுடன், மற்றவர்களிடம் அதனைப்பற்றி அறிந்துகொள்ளவும் வெட்கப்படுகிறார்கள். வயிற்றில் உண்டாகிய சூலை பிழையான வழியில் அழிக்கமுயன்ற பல குடும்பப் பெண்கள் இறந்து போயிருக்கிறார்கள். இதனால் அவர்களின் குடும்பங்கள் மிகவும் பாதிப்படைகின்றன. கிராம மக்களோடு கிராம மக்களாக கிராமங்களின் முன்னோடிகளாக விளங்கும் ஆசிரிய ஆசிரியைகள் தமது கல்விப் போதனையுடன் இத்தகையான சமூகசேவையையும் செய்ய முன்வரவேண்டும். குருமொழியைத் தெய்வமொழியாகக் கருதும் கிராம மக்களுக்கு ஆசிரியர்கள் கருத்தடைமுறைகளை தெளிவாகச் சொல்லி விளக்கி வைப்பதுடன், எதுவித பயமோ வெட்கமுமின்றி வைத்தியர்களின் ஆலோசனைகளைப் பெறவும் வழிசெய்யவேண்டும். இதன்மூலம் அறிவீனமான முறைகளினால் ஏற்படும் மரணத்தையும் தவிர்க்கவும் தடுக்கவும் வழிபிறக்கும்", என்று அவர் குறிப்பிட்டார்.

"சீனி விலைகுறைப்பினால்

வடக்கில் 60 கருப்பட்டி தொழிற்சாலை மூடப்பட்டன

நிதியமைச்சின் பிரதிஅதிபர் உரை

(யாழ்ப்பாணம்)

"கடந்த சில காலத்தில் வடக்கில் 60 பனங்கட்டி உற்பத்தித் தொழிற்சாலைகள் நிறுவிலும் தினமும் 100 ருத்தல் பனங்கட்டி ஒவ்வொரு தொழிற்சாலையிலும் உற்பத்தி செய்யப்பட்டது. இன்று சீனி விலை குறைந்துவிட்டதால் இத்தொழிற்சாலைகள் இயங்கவில்லை."

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பனந்தொழில் அபிவிருத்தி ஆய்வரங்கில் பேசிய நிதியமைச்சுப் பிரதிஅதிபர் திரு. கே. சண்முகலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் தலைமையில் நடந்த ஆய்வரங்கில் திரு. சண்முகலிங்கம் பேசும் போது கூறியதாவது:

பனஞ்சீனி உற்பத்தி

"நான் யாழ் மாவட்டத்தில் 70ம் ஆண்டு முதல் 74ம் ஆண்டு வரை திட்டமிடல் பிரிவில் கடமையாற்றியபோது மரவரி முறை மாறி, கட்டுத் தவறணைமுறை கொண்டுவரப்பட்டது. அப்போது இவைபற்றி அறிய வாய்ப்பேற்பட்டது. யாழ் குடாநாட்டில் 75 லட்சம் பனைகள் உண்டு. அப்போது சீனியின் விலை ஆறு ரூபாவாக இருந்ததினால் பனங்கட்டிக்கும் கிராக்கியிருந்தது. வடக்கில் 60 பனங்கட்டி உற்பத்திச் சாலைகள் நிறுவப்பட்டன. பனம்பாணி மூலம் சீனி தயாரிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

"இதில் பல கஷ்டங்களை எதிர்நோக்கவேண்டியிருந்தது: பதநீர்க்கு விலை அதிகரிப்பால் போதிய பதநீர் பெறமுடியவில்லை. 'கற்பகதரு' என்று குறிப்பிட்டுப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கும் நாம் பனையிலிருந்து எவ்வெவ்வளவு பிரயோசனங்களைப் பெறலாம் என்று ஆராயவேண்டும்.

"அரசு 150 ஆயிரம் தொன் சீனியை இறக்குமதிசெய்து ருத்தல் 3 ரூபாவாக விற்பனை செய்து வருகிறது. பனஞ்சீனியை ஒரு ருத்தல் 8 ரூபாவிற்கு உற்பத்திசெய்யமுடியுமா? கற்பகதரு என்று கூறிக்கொண்டு சீனியை உற்பத்தி செய்து 10 ரூபாவிற்கு விற்க முடியுமா? என்ன விலைக்கு உற்பத்தி செய்யலாமென்று ஆராயவேண்டும்.

"பெருந்தொகையான பனைகள் தனியொருக்கு சொந்தமாக இருக்கிறது. பனையைச் செட்டால், சருட்டணி அவரை வரை [illegible] வேட்கிறார்கள். இந்த நிலையில் கருப்பஞ்சீனியை போதியளவு உற்பத்தி செய்யமுடியுமா?

"சீவல் தொழிலாளர்கள் குறைவாக இருக்கிறார்கள். பரம்பரையாக சமூகத்தில் ஒரு பகுதியினரே இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சுதந்திர நாட்டிலும் அவர்களின் பிள்ளைகள் இத்தொழிலில் ஈடுபட முன்வருவதில்லை. ஆகக் கூடிய வருமானத்தை எடுப்பது சமூகப் பிரச்சினையாக இருக்கிறது. இந்த சீவல்தொழிலாளரின் வருமானம் கூடுதலாகக் கிடைக்க வேண்டும். ஒரு இளைஞர் சீவல் தொழில் மூலம் 8000 ரூபா வருமானம் பெறும் நிலை ஏற்படவேண்டும், அப்படியான சூழ்நிலை உருவாகுமா?

"வெளிநாடுகளில் சீனி உற்பத்திக்கு மூலதன செலவு நிறைவு ஏராளமான ஏக்கர் நிலத்தில் நவீன யந்திரங்களை பயன்படுத்துகிறார்கள். இந்நிலை ஏற்படுமா?

நிதி அபிவிருத்தி ஆலோசனை ஸ்தாபன தலைவர் திரு. சோமநாதன் கூறியதாவது:

"தேசிய சேமிப்பு வங்கி 18 வீத வட்டி கொடுக்கிறது. தனியார் துறையினர் இதனை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தனியார் துறையினர் பொருளாதாரத் துறையில் வளம்பெற வேண்டும் என்ற நோக்கமுடையவன் நான். பெரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு பணம் செலவிடப்படுவதால், தனியார் துறையினரை கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பிராந்திய ரீதியில் அபிவிருத்தி நடைபெற வேண்டும். பொருளாதார வளர்ச்சி நகர வளர்ச்சியாக இருப்பதால் கிராம வளர்ச்சி ஏற்படாமல் இருக்கிறது. இந்தக் குறையை மாற்ற வேண்டும். கிராமப்புறங்களும் வளம்பெற வேண்டும். அங்குள்ள வளங்களை கொண்டு சிறு தொழில்களை ஆரம்பிக்கவேண்டும்.

"அரசின் அதிகாரம் பரவலாக்கப்படவேண்டும். அந்தந்த பகுதி அபிவிருத்திகளில் அக்கறை காட்டவேண்டும்.

சீனித் தேவை

திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு. எஸ். சிவதீசன் கூறியதாவது: "சீனியின் தேவை பற்று வருடத்தில் 11 மடங்காக அதிகரித்துள்ளது. தேவைக்கேற்ற உற்பத்தி செய்யப்படுவதில்லை. அரசு மானியம் வழங்கி சீனியை 3 ரூபாவிற்கு விற்கிறது. மானியம் இல்லாவிட்டால் விலை அதிகரிக்கும். ஒரு காலத்தில் சீனியின் விலை ஏழு எட்டு ரூபாவாக அதிகரிக்கலாம் என்பதில் சந்தேகமில்லை. சீனி உற்பத்தி அதிகரிப்பு, தேவையைப் பார்க்குமிடத்து போதுமானதல்ல. ஆதலால் வேறு விதத்தில் சீனி உற்பத்தி செய்ய வேண்டும். பனம் வளத்தைப் பயன்படுத்தலாம்.

"உலகில் மரங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாம் கட்டட வேலைக்குப் பனையைப் பயன்படுத்துகிறோம். மரத்தின் ஒரு பகுதி பனைகளை வெட்டுத் தேவைக்கு ஒதுக்க வேண்டும். அதேசமயம் பனைகளை நாட்ட வேண்டும். தும்பு உற்பத்திமூலமும் பயன்பெறலாம்.

பனம் பொருள்கள்

கலாநிதி சு. வித்தியானந்தன் கூறியதாவது:

"பனம் பொருட்கள் மனிதனுக்கு பலவிதத்தில் உதவுகின்றது. விக்காலத்தில் பனை நாரால் வேலி அடைப்பார்கள். பனை ஓலையை வேலிக்குப் பாவிப்பார்கள். பனை ஓலைப் பெட்டி, கடகம், தட்டு, துலாக் கொடியல், பனங்கிழங்கு; இப்படிப் பார்த்தால் வீட்டில் பனைப்பொருட்கள் கூடுதலாக இருப்பதைக் காணலாம்.

முற்காலம் அபிவிருத்தி ஒரு குடிசைத் தொழிலாக இருந்தது. பனம்பொருட்களை நாம் நன்கு பயன்படுத்த வேண்டும்."

பனம்பொருள் அபிவிருத்திச் சபை தலைவர் திரு. சி. வேலாயுதம் தமிழர் பாரம்பரியமாக வாழும் பிரதேசங்களில் பனை அதிகமாக இருப்பதால், அதனை நன்கு அபிவிருத்தி செய்யவேண்டுமென்றும் கூறினார். (ஈ)

கரோல் ஆராதனை

(அரியாலை)

நல்லூர் பரி யோவான் ஆலயத்தில் நடைபெற்ற கரோல் ஆராதனையில் பரி யாக்கோபு ஆலய பாடகர் குழுவினர் சிறந்த கரோல் பாடல்களைப் பாடினர்.

கரோல் பாடகர்களின் பாடல்களுக்கு யாழ்ப்பாண இசைக்கல்லூரி வயலின் ஆசிரியை திருமதி தனதேவி சு[illegible]வும் நடன ஆசிரியை செல்வி சாந்தா பொன்னுத்துரையும் வயலின் வாசித்து கரோலை செவ்விசைமய மிகுந்ததாக்கினர்.

மன்னார் விஜயம்

(மன்னார்)

கல்விச்சேவைகள் அமைச்சர் திரு. லயனல் ஜயதிலக, மன்னாருக்கு இம்மாதம் 31-ம் திகதி விஜயம் செய்வார்.

மன்னார் மாவட்டத்தில் இலவசபாடப்புத்தகம் வழங்கும் வைபவத்திலும் அமைச்சர் உரையாற்றுவார். (லெ)

விசேட வெகுமதி

பிறிக்ஸ் அன்ட் ஸ்ட்ராட்டன் இயந்திரத்துடன் ஒரு பம்பைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு விவசாயிக்கும் 50/- ரூபா பெறுமதியுள்ள விசேட வெகுமதி உரிமைச் சீட்டு ஒன்றை வழங்க முன்வந்துள்ளோம். இந்த உரிமைச் சீட்டைக் கொண்டு, விவசாயிகள் தங்களின் அபிமானமுள்ள ஹேக்ஸிகம் விவசாய இரசாயனப் பொருட்களை ஹேக்ஸிகம் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்யலாம்.

இயந்திரம் வாங்கிய பற்றுச்சீட்டையும் உதிரிப்பாகப் புத்தகத்தையும் எமக்கு அனுப்பினால் போதும். உடனடியாக நாம் அந்த பற்றுச் சீட்டையும் உதிரிப்பாகப் பதிவேட்டுப் புத்தகத்தையும் சேர்த்து விசேட வெகுமதி உரிமைச் சீட்டொன்றை உங்களுக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைப்போம்.

இப்பரிசுத்திட்டம் 15. 11. 79 இலிருந்து 31. 3. 80 வரையிலும் நடைமுறையிலிருக்கும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்க : பொறியியல் விற்பனை, பராமரிப்புப் பகுதி,

4 CYCLE
BRIGGS & STRATTON

ஹேலீஸ் லிமிட்டெட்
25, பௌஸ்டர் ஒழுங்கை கொழும்பு - 10.
தொலைபேசி: 96331 - 6.

Mel Ads

பம்பு வியாபாரிகளுக்கும் விசேட சன்மானம் !
உங்களால் விற்பனை செய்யப்படும் பம்புகளுக்கு நாம் வழங்கும்
ஒவ்வொரு 25 விசேட வெகுமதி உரிமைச் சீட்டுகளுக்கும்
உங்களுக்கு ரூபா 500/- சன்மானம் !

தமிழ் இளைஞர் பேரவை தீர்மானம்

(மட்டக்களப்பு)

"தமிழர் விடுதலைக் கூட்டணி ஆட்சிமன்றக் குழு, [illegible] பாராட்டி பேசியதை தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப்பீடம் நடவடிக்கை எடுக்கத்தவறின் அவ்வாட்சிமன்ற உறுப்பினர்களுக்கெதிராக தமிழ் இளைஞர் பேரவை நடவடிக்கை எடுக்க வேண்டுமென இச்சபை கோருகின்றது.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பில் கூடிய தமிழ் இளைஞர் பேரவை, மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது. கூட்டத்திற்கு அமைப்புச் செயலாளர் திரு இரா வாசுதேவா தலைமை வகித்தார்.

மற்றைய தீர்மானங்கள் வருமாறு:

"இலங்கையின் நடைமுறையில் இருக்கும் ஜனநாயகத்தின் போர்வையில் இனவாதமும் முதலாளித்துவமும் ஆட்சிமன்றத்தைப் பயன்படுத்தி தமிழ் தேசிய இனத்தை அடிமைப்படுத்தி ஆண்டுவரும்பொழுது தமிழ் இனத்தின் பொருளாதார வாழ்வு சுரண்டப்படும் பொழுது தமிழ்த் தேசிய இனம் தன்சொந்தமண்ணிலேயே திட்டமிட்டு அழித்தொழிக்கப்படும்போது:

"அரசியலமைப்பில் முதலாளிகளுக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கும் அதே வேளை தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக அத்தியாவசிய சேவைகள் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது:

தொழிலாளர் வர்க்கமும் தமிழ் தேசிய இனமும் ஒடுக்குமுறைக்கெதிராகப் போராடுவதை அவசரகாலச் சட்டத்தையும் பிரகடனப்படுத்தி [illegible];

"தமிழ் இளைஞர்கள் நாட்டின் பாதுகாப்பற்றவர்களாக, சிறைவாசம் அனுபவித்து இன்னல்கள் அனுபவித்துவரும் வேளையிலும்;

"இவ்வாறான ஜனநாயக விரோத நடவடிக்கைகளிலும், மனித உரிமைகளை மீறுவதிலும்கூட முன்னணியில் நிற்கும் ஆட்சிபீடத்தின் அமைச்சரவையை பாராட்டிய கூட்டணி ஆட்சிமன்ற உறுப்பினர்கள் மீது தனி கூட்டணி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மட்டக்களப்புத் தொகுதி த. இ. பேரவைப் பொதுக் குழு எடுத்துள்ள தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, இது சம்பந்தமாக த. இ. பேரவையின் பொதுச்சபையை அவசரமாகக் கூட்டவேண்டுமென்றும், கூட்டணிப் பொதுச் சபையைக் கூட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தீர்மானித்துள்ளது."

(செ)

மன்னார்-பேசாலை பஸ்சேவை

(மன்னார்)

நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு பேசாலை மக்களின் போக்கு வரத்து நன்மை கருதி மன்னார் பஸ் டிப்போ மன்னார் பேசாலை பஸ் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது. இச்சேவை குறிப்பிட்ட சில தினங்களுக்கு மட்டுமே நடைபெறும் என்று அறியப்படுகிறது.

இலங்கையின் குடிசன......

(13ம் பக்கத் தொடர்ச்சி)

யின் குடிப்பெருக்கத்தில் சுமார் 90 வீதம் நகர்வுப் பெருக்கமாக அமைந்தது. ஆனால் 1948ம் ஆண்டின் பின்னர் இந்தியாவிலிருந்து மக்கள் வெளியேறவும், இலங்கைக்கு வரவும் தடைச்சட்டங்கள் விதிக்கப்பட்டன. இதனால் நகர்வுப் பெருக்கம் குறைந்தது. இதன்பின்னர் 1964ம் ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் பிரகாரம் இந்தியர்கள் இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு ஒப்புக்கொள்ளப்பட்டது. இதனால் 1964ம் ஆண்டின் பின் நகர்வுப் பெருக்கம் முக்கியத்துவமற்றதாக மாறியது. இதனால் இன்று இலங்கையில் குடிசனப் பெருக்கத்திற்குப் பிறப்பு வீத அதிகரிப்பே முக்கிய காரணமென்று கூறலாம். எனினும் இறப்பு வீதம் அதிகரிக்காமலிருப்பதும் இலங்கையின் குடிசனப்பெருக்கத்திற்குப் பிறிதொரு காரணமாகின்றது.

இறப்பு வீதத்தைத் தீர்மானிக்கும் காரணிகள்

(அ) வருமான நிலை

மக்களின் வருமானங்கள் அதிகரித்தால் இறப்பு வீதம் குறையும். வருமானம் குறைந்தால் சத்துள்ள உணவுவகைகளை மக்கள் பெறமுடியாது கஷ்டமுறுவதினால் நோய்கள் அதிகரித்து இறப்பு வீதம் கூடும்.

(ஆ) நோய்கள்

ஒரு நாட்டில் கொடிய நோய்கள் பெருகினால் இறப்பு வீதம் கூடும். உதாரணமாக மலேரியா, கொலரா போன்ற நோய்கள் ஏற்பட்டால் இறப்பு வீதம் அதிகரிப்பது சகஜம்.

(இ) போர்

ஒரு நாட்டில் யுத்தம் தொடர்ந்து நடந்தால் அதன் காரணமாக இறப்பு வீதம் அதிகரித்து குடிசனப் பெருக்கம் குறையும்.

(ஈ) மருத்துவவசதி

ஒரு நாட்டின் மருத்துவத் துறையில் முன்னேற்றங்கள் பெருகினால் அதன் காரணமாகவும் இறப்பு வீதம் குறையும். மருத்துவ வசதியை அதிகரிக்காவிட்டால் இறப்புவீதம் கூடும்.

(உ) அரசாங்கக் கொள்கைகள்

அரசாங்கம் முதியோர் பராமரிப்பு வசதிகளைக் குறைத்தால் இறப்பு வீதம் அதிகரிக்கும். அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்படும் வசதிகள் அதிகரித்தால் இறப்பு வீதம் குறையும்.

பிறப்பு வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

பிறப்பு வீதத்தைத் தீர்மானிக்கும் காரணிகள் பலவாகும். அவற்றின் முக்கியமானவை பின்வருமாறு:

(அ) வருமானம்

மக்களின் வருமானம் அதிகரிக்குமானால் பிறப்பு வீதமும் கூடும். வருமானம் குறைந்தால் பிறப்பு வீதமும் கட்டுப்படுத்தப்படுமெனலாம்.

(ஆ) கல்வி வசதி

நாட்டு மக்களின் கல்வித்தரம் கூடுதலாக இருந்தால் பிறப்பு வீதங்கள் குறையும் என எதிர்பார்க்கலாம். குடும்பக்கட்டுப்பாடு, கருத்தடை பற்றி மக்களுக்கு விளக்குவதின் மூலம் குடிசனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தலாம்.

(இ) திருமண வயது

நாட்டில் பெண்களின் திருமண வயது படிப்படியாகக் கூடிச்செல்கின்றது. இலங்கையில் சீதனப்பிரச்சினை திருமண வயதிற்குரிய ஆண்கள் குறைவாக இருத்தல்போன்ற காரணங்களினால் பெண்களின் திருமண வயது அதிகரித்துச்செல்கிறது. இதன்காரணமாக ஆண்களின் திருமண வயதும் கூடுகிறது. திருமணவயது கூடிச் சென்றால் பிறப்பு வீதமும் குறையும்.

(ஈ) மருத்துவ வசதி

மருத்துவ வசதிகளின்மூலம் குடும்பக்கட்டுப்பாடு கருத்தடை மேற்கொள்வதிலும் பிறப்புவீதத்தைக் குறைக்கலாம். மருத்துவ வசதிகளினால் தற்பொழுது தாய் மரணம் சிசுமரணம் என்பன என்பன தவிர்க்கப்பட்டு பிறப்புவீதம் பெருமளவில் குறைந்துவருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மட்டக்களப்பு

பஸ் நிலையத்தில் ஏற்பட்ட அமளி துமளி

(மட்டுநகர்)

மட்டக்களப்பு பிரதான பஸ் நிலையத்தில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து பல மணி நேரம் பஸ் நிலையங்கள் [illegible] பட்டதுடன் பஸ் சேவைகளும் ஸ்தம்பிதம் அடைந்தன.

இச்சம்பவத்தின் விபரம் வருமாறு:

"மட்டுநகர் பிரதான பஸ் நிலைய [illegible] ஒரு நடத்துனரும் [illegible] ஒருவரும் மதுபோதையில் வாய்த்தர்க்கம் புரிந்தவண்ணம் இருந்தனர். கடமையில் ஈடுபட்டிருந்த நேரக்காப்பாளர்கள் இவர்களை சமாதானம் செய்ய முயன்ற போது நடத்துனர் நேரக் காப்பாளர்களை தாக்கத் தொடங்கினாராம். இதனால் பஸ்நிலைய அலுவலகத்திற்குள் தடம், புடம் சத்தம் எதிரொலித்தது.

பொதுமக்களும், பிரயாணிகளும் வேடிக்கை பார்த்தவண்ணம் இருக்க இ.போ.ச ஊழியர்கள் சமரசம் செய்ய [illegible] அதே நேரத்தில் பொலிசார் ஸ்தலத்திற்கு விரைந்து அமைதியை நிலைநாட்டினர். பின்னர் இ.போ.ச உத்தியோகத்தர் பொலிசாரால் வைத்தியப் பரிசோதனைக்காக பிரதான வைத்திய சாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

நடத்துனர், நேரக்காப்பாளர்கள் மீது பொலிசாரும் இ.போ.ச. சபையினரும் தனித்தனியே விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

எதிரிகள் விடுதலை

(கொழும்பு)

கம்பஹா கொலைமுயற்சி வழக்கில் விசாரணை நடத்தப்பட்டு எதிரிகள் மூவரும் விடுதலை செய்யப்பட்டனர். இவ்வழக்கு கம்பஹா நீதிமன்றத்தில் நீதிபதி திரு ஜே பி இ சுவாரிஸ் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் 77 ஏப்ரல் 14ம் தேதி டி அந்தனி பெர்னாண்டோ என்பவர், [illegible] கொலை செய்ய முயற்சித்ததாகவும் உபாலி ஆனந்த ரஞ்சித் ஜெயவர்த்தனாவைக் கொலைசெய்ய முயற்சித்ததாகவும் லயனல் ஜெயசிங்கா என்பவர் 2ம் எதிரிக்கு உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான டி எஸ் குணசேகர, ஜி ஜி பொன்னம்பலம் (ஜூனியர்) டஸ்ரன்ட் அக்கின், ஏ வன்ரன் சில்வா ரென்ரன் விக்கிரமசிங்க ஆகியோர் ஆஜரானார்கள்.

(க)

யாழ் மாநகரசபை கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகராட்சி மன்ற விசேட பொதுக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பதில் மாநகர முதல்வர் திரு. பி.எஸ். சேவியர் தலைமையில் நடைபெறும்.

மாவட்ட அமைச்சரை சந்தித்தனர்

(அரியாலை)

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் நிர்வாகிகளைக் கொண்ட குழுவினர் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் திரு யு பி விஜயகோனை அவரது காரியாலயத்தில் சந்தித்து வள்ளுவர் சமூகக்குறைபாடுகள் குறித்த மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

தூதுக்குழுவினர் தெரிவித்த குறைபாடுகளுக்குச் செவிமடுத்த மாவட்ட அமைச்சர் இக்குறைபாடுகளை நீக்க தான் ஆவன செய்வதாக உறுதி கூறினார்.

மகாசபைத் தலைவர் திரு எம் வேதாசன் தலைமையில் சென்ற தூதுக்குழுவில் மகாசபை உபதலைவர் திரு எம் கே இளையப்பு பொதுச் செயலாளர் திரு எஸ் பி ஜீவானந்தம் நிர்வாகச்செயலாளர் திரு எஸ் செல்வராசா ஆகியோர் அங்கம் வகித்தனர்.

'ஈழநாடு' இந்திய தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டரசாங்கம்? :..............................
(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? ....
(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்? ....
(4) புதிய பிரதமர் யார்? ....
பெயர்: ....
விலாசம்: ....
....
....

....
கையொப்பம் திகதி

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:
தேர்தல் போட்டி "ஈழநாடு", த. பெ. எண்: 49,
யாழ்ப்பாணம்.

சில நிமிடங்களில்
கிருமிப் பீடைகளை ஒழிப்பது
எக்கலக்ஸ்-25
Ekalux-25
பரந்த கொல்லும் தன்மை உடையது.
பூரண பாதுகாப்பு
சில தடவை தெளித்தால் போதும்.
A B C

தேயிலை, நெல், பருத்தி, கனி மரங்கள், காய்கறி மற்றும் பயிர்களில் பாவிக்கச் சிபாரிசு செய்யப்படுகிறது.

இறக்குமதியாளர்கள்:
ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெ
62, ஜெதவன வீதி,
கொழும்பு 14.

“வறுமையை உணர்ந்தவரே நாட்டிற்குத் தேவை”

வானொலியில் லோக்தள் ‘மணி’

[சென்னை]

கடந்த முப்பத்திரண்டு வருடங்களாக இந்தியாவில் ஆட்சியிலிருந்த அரசாங்கங்களால் வறுமையை விரட்டியடிக்கமுடியவில்லை. இதற்குக் காரணம், பெரும் செல்வந்தர்கள் ஆட்சியில் இருந்ததனாலே. எனவே இன்றைய நிலையில் வறுமையை உணர்ந்த, கிராமமக்களின் தேவைகளை நன்கறிந்த ஒரு தலைவரே இந்தியாவிற்குத் தேவை.”

இவ்வாறு இந்திய மக்கள் கட்சியின் (லோக்தள்) தமிழ் நாடு பிரிவுத் தலைவர் திரு. என். மணி, இந்திய வானொலியில் நிகழ்த்திய தேர்தல் பிரசார உரையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

“இந்திய நகர மக்களின் வருமானம் அதிகரித்துவருகின்ற அதேவேளையில் கிராம மக்களின் வருமானம் குறைந்து வருகின்றது. இதற்கு ஒரு முடிவில்லையா?

இந்திரா ஆட்சியமைத்தால்...

“இந்தியாவை இதுவரை ஆட்சிசெய்த தலைவர்கள் கடந்த 32 வருடங்களாக இந்தக் கொடுமையைப் பற்றிச் சிந்தித்தார்களா? இந்த 32 ஆண்டுகளில் 27 ஆண்டுகள் திருமதி இந்திரா காந்தியும், அவரது தந்தையும்தான் ஆண்டார்கள், நாட்டின் வறுமை நாளுக்குநாள் மக்களின் குரல்வளையை நெரித்து மக்கள் மூச்சுத் திணறுகிறார்கள். ஆனால் இந்திரா காந்தி எங்களால்தான் இந்நாட்டை ஆள முடியும் என்கிறார். இதை நாம் நம்பவேண்டுமென்று ஒரு கூட்டம் பிரசாரம்செய்கிறது. இது நல்ல வேடிக்கை. இந்திரா காந்தி ஆட்சிக்கு வந்தால் புதிதாக எதைத்தான் செய்துவிடப்போகிறார். வறுமையில் வாடும் ஏழைகள், உடுக்க உடையின்றி, உணவின்றிச் சாகவேண்டியதுதான்.

சீனாவைப் போல்...

“இந்தியாவைவிடச் சீனா மிக அதிகமான மக்கள் தொகை உள்ள நாடு. அங்கு வளங்கள் அதிகம் இருக்கவில்லை. வறுமைதான் குடிகொண்டிருந்தது. ஆனால் மா-சே-துங் அதிபர் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு அவர் தீட்டிய திட்டங்கள் காலப்போக்கில் சரியான பலனைத் தர ஆரம்பித்தது. அந்நாடு தன் தேவைகளுக்கு எந்நாட்டிடமும் கையேந்தி நிற்கவில்லை. உலக வல்லரசுகளில் ஒன்றாக எழுச்சிமிக்கப் பிரமாக நிற்கின்றது. இந்தியா உலக நேசநாடுகளில் ஒன்றாக மூச்சுத்திணறி நிற்கிறது!

“சீனா உலக நாடுகளில் ஒன்றாக நிற்கமுடிந்தது எப்படி? இத்தனை என்பது வாழ்கின்ற சுற்றுப்புற அனுபவங்களின் பிரதிபலிப்பு. புலன்களால் அனுபவிக்கமுடியாதது பற்றி எந்த மனிதனும் சிந்திக்கவேமுடியாது.

கிராமத்திலே பிறந்தவர்

“மா-சே-துங் கிராமத்திலே பிறந்து, கிராம மக்களுடனேயே வாழ்ந்தவர். அவர் அவர்களின் வாழ்க்கையைப் பார்த்து அதற்கேற்பச் சிந்தித்தார். முடிவு சரியாக இருந்தது. நாடு எழுந்து நிற்கிறது.

நேருவை மதிக்கிறோம்

“பண்டித ஜவஹர்லால் நேருவின் தேசபக்தியையும், தியாகத்தையும் யாரும் குறைத்து மதிப்பிட்டுவிடமுடியாது. ஆனால் அவர் பசியின் கொடுமையை அனுபவித்தறியாதவர். கிராம மக்களின் அவலங்களை நேரடியாகக் கண்டறியவில்லை. அதனால் அவர் தீட்டிய திட்டங்கள் கிராமமயமான இந்தியாவுக்குச் சரியான பலனைத் தரவில்லை. எனவே கிராமத்திலேயே பிறந்த, மக்களின் நிலையை உணர்ந்த ஒருவர் தேவை.

“வறுமையின் கொடுமையை நேரடியாக உணர்ந்தவர் எங்கள் தலைவர் சரண்சிங். வறுமையின் பயங்கரத்தை, கிராமத்தில் பிறந்து வளர்ந்த அவர் நன்கு அறிந்திருக்கிறார். அவரை நாட்டின் தலைவராக்குவதன் மூலம் நாட்டின் வறுமையை விரட்டுவோம்” (கு)

ஈரான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துமா?

நியுயோர்க், டிச 26

இந்துமா சமுத்திரப் பிரதேசத்தில் அமெரிக்க ராணுவ நடமாட்டம் அதிகரித்துள்ளதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

“அமெரிக்க பத்திரிகைகளும் தகவல் சாதனங்களும் யுத்தக் கப்பல்களின் நடவடிக்கைகளை அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையுடன் மட்டுமே அவற்றை இணைக்கின்றன. வன்முறையைப் பயன்படுத்தி இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழிகள் பற்றிப் பத்திரிகைகள் பகிரங்கமாக விவாதிக்கின்றன. ஈரானின் எண்ணெய் வயல்களின் மீது குண்டு வீசுவது, விமானதளங்களைக் கைப்பற்றுவது முதலியவை இந்த நடவடிக்கைகளில் அடங்கும்” என்று ஏ பி என், செய்தியொன்று கூறுகிறது.

“மிட்வே” விமானந்தாங்கிக் கப்பல் தலைமையில் ஒரு பெரிய அமெரிக்கக் கடற்படை கோஷ்டி அரபிக் கடலில் பல வாரங்களாக நடமாடுகிறது. “கிட்டி ஹாக்” என்ற விமானந் தாங்கிக் கப்பல் தலைமையில் மற்றொரு கப்பல் கோஷ்டி, சூபிக் பேயிலிருந்து (பிலிப்பைன்ஸ்) இதே பிரதேசத்தை நோக்கி விரைந்தது. கடைசியாக ‘நிமிட்ஸ்’ விமானந் தாங்கிக் கப்பலும், ரக்கெட் பொருத்தப்பட்ட ‘[illegible]’ என்ற குருசியலும் மத்திய தரைக் கடலிலிருந்து பாரசீகக்குடாவுக்கு விரைந்துள்ளன. இந்தக் கப்பல்களின் தாக்கும் சக்தி, விமானந் தாங்கிக் கப்பல்களில் உள்ள விமானங்களின் எண்ணிக்கை, அவை பறந்து சென்று தாக்கக்கூடிய பிரதேசத்தின் பரப்பு முதலியவை பற்றி அமெரிக்கப் பத்திரிகைகள் ஏற்கனவே கணக்குப் போட்டுச் சொல்லிக் கொண்டிருக்கின்றன” என்றும் ஏ.பி. என், செய்தி தெரிவிக்கிறது.

அமெரிக்காவின் ராணுவ முஸ்திபுகள் பாகிஸ்தானிலிருந்து துருக்கி வரை உள்ள பரந்த பிரதேசத்தில் நடைபெறுவதாக நியுயார்க் ‘டெய்லி நியூஸ்’ பத்திரிகை கூறியுள்ளது. முதலாளித்துவ உலகத்தின் மிகப் பெரிய எண்ணெய் வயல்கள் இந்தப்பிரதேசத்தில்தான் உள்ளன. வாஷிங்டன் இந்தப் பிரதேசத்தைத் தனது ‘ராணுவ அக்கறை’ உள்ள பிரதேசமாக அறிவித்துள்ளது.

ஈரானிய

படைத்தளபதி பதவிநீக்கம்

(தெஹ்ரான்)

ஈரானியமதத்தலைவர் அயத்தொல்லா கொமெய்னி, ஈரானிய ஆயுதப்படைத்தளபதியான ஹாஸன் ஷக்கீரை நேற்று பதவிநீக்கம் செய்துள்ளார். இதற்கான காரணம் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

கமநலசேவை நிலையம்

[புலோலி]

யாழ்- மாவட்டத்தில் 18 வது கமநலச் சேவை நிலையமான [illegible]யில் புதிய கமநலச் சேவை நிலையத்தை அமைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நரிப்புலித் தோட்ட மட்பாண்டநிலையம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு நரிப்புலித் தோட்டம் என்னும் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் கிராமிய மட்பாண்ட நிலைய வேலைகள் முடியும்தறுவாயில் உள்ளன.

45 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்படும் இந்நிலையத்திற்கான அத்திபாரக்கல்லை பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக் கட்டுநகர் முதல்வருமான திரு செல்லையா இராசதுரையின் வேண்டுகோளின் பேரில் கடந்த ஜூலை மாதம் கொழும்பு மாவட்ட அமைச்சர் திரு. [illegible] நாட்டிவைத்தார்.

பனம்பொருள் உற்பத்திப்பயிற்சி நிலையங்கள்

[வண்ணார்பண்ணை]

பனம்பொருள் அபிவிருத்திச் சபை வடபகுதியில் 13 பனம்பொருள் உற்பத்திப் பயிற்சி நிலையங்களை நிறுவவுள்ளது. அடுத்தாண்டு முற்பகுதியில் இந்த நிலையங்கள் இயங்கவிருக்கின்றன. இந்த நிலையங்களில் மொத்தம் 650 பயிற்சியாளர்கள் பயிற்சி பெறவுள்ளனர். பயிற்சியாளர்களைத் தெரிவதற்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்தவாரம் இச் சபையினால் நடத்தப்பட்டன.

தொகுதிக்கு ஐம்பது பேர் வீதம் 650 படித்த வேலையற்ற இளைஞர்கள் இப் பயிற்சிக்குத் தெரியப்பட்டுள்ளனர்.

பனைவளம் அதிகமாயுள்ள ஊர்காவற்றுறைத் தொகுதியில் மூன்று பயிற்சி நிலையங்களும், ஏனைய தொகுதிகளில் ஒவ்வொரு பயிற்சி நிலையங்களும் நிறுவப்பட்டுள்ளதாக யாழ் மாவட்ட அபிவிருத்திப் பகுதி உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். இத்திட்[illegible] [illegible]கான ஏற்[illegible] பொருள் அபிவி[illegible] [illegible] [illegible]

உருளைக் கிழங்கில் காளான் நோய்களை ஒழிப்பது அன்றக்கோல் 70°/.

பயிரை இளம் பருவத்திலும் முதிர் பருவத்திலும் தாக்கும் முன், பின் கூற்று வெளிறல் நோய் பற்றி உருளைக் கிழங்கு பயிரிடுவோர் இனி அஞ்சத் தேவையில்லை. அதற்கு வன்மை வாய்ந்த மருந்தான அன்றக்கோல் பங்கசுநாசினியை உற்பத்தி செய்து தருகிறது ‘‘ப்பாயர்’’.
காய்கறி, புகையிலை, திராட்சை,
தோடை, பழ விருட்சங்கள்,
வாழை முதலாம் தாவரங்களைப் பாதிக்கும் காளான் நோய்களுக்கும் அன்றக்கோல் சிறந்தது. ஆரோக்கிய வளர்ச்சி, அதிக விளைச்சல், கூடுதல் லாபம் தருவது அன்றக்கோல்.



உருளைக்கிழங்கைத் தாக்கும் பைட்டோப்தரு என்னும் இங்கே காணும் காளான் நோயை அன்றக்கோல் ஒழிக்கும்.

Mel Ads

BAYER
பயிர்களுக்குச் சிறந்த பாதுகாப்பு ‘‘ப்பாயர்’’
ஒரு ‘‘ப்பாயர்’’—உற்பத்தி.

இலங்கையில் தயாரிப்போர்
ஹேகெம லிமிட்டெட்
50, பொஸ்டர் ஒழுங்கை,
கொழும்பு - 10.

RANEE - Jaffna
Daily 5 Shows at 10-30 a.m. 2-15, 4-45, 7-15
& 9-45 p.m.
Peter Fonda Susan George
In
Dirty Mary Crazy Larry
(Color)

100-வது வெற்றித்திருநாளை நோக்கி ஓடுகிறாள்!
மனோஹரா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா, சந்திரமோகன், கவிதா,
நடித்த
அந்தமான் காதலி
(வண்ணப்படம்)

100-வது வெற்றித் திருநாள் நோக்கி
ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி காலை 10-30, பி.ப 2-30, 6-15, 9-45
சிவாஜிகணேசன் - சுஜாதா
நடித்த
தீபம்
(வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள் சனி-ஞாயிறு 4 காட்சிகள்
பாட்டாளியின் சபதம்
28ந் திகதி முதல் நல்லநேரம்

லிடோ (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 4-30, 7-00 9-30 போன்: 7098
SUPER COPS
(More Suited For Adults)

1980- ஜனவரி 1-ம் திகதி புத்தாண்டன்று
வெற்றி முழக்கமிடும் 75வது நிறைவு தினத்தைக் கொண்டாடுகிறது
மக்கள் கலைஞர் ஜேம்ஸ்பொண்ட் ஜெய்சங்கரின்
150-வது புரட்சிப்படைப்பு...
சாந்தி யாழ்நகர். போன்: 7642. தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.
டாக்ஸி ட்ரைவர்
கண்ணைக் கவரும் உன்னத வண்ணச் சித்திரம்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 10-30, பி.ப.2-30 6-00, 9-30
சிவாஜி - ஜெயலலிதா
ஜி. வரலட்சுமி
நடித்த
(புத்தம் புதிய பிரதி)
தாய்

ராஜா யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

நடிப்புக்கு ஈடுஇணை யாருமில்லை
என சவால்விட்டு நடிக்கும் சிவாஜி
அதற்கு ஈடு கொடுக்கும்
கே. ஆர் விஜயா
சிவாஜி - கே. ஆர். விஜயா
மனோரமா
தேங்காய் சீனிவாசன்
நடிக்கும்
ஜெனரல் சக்கரவர்த்தி
(ஈஸ்மன் கலர்) டைரக்ஷன்: யோகானந்
குடும்பத்துடன் பார்க்கவேண்டிய படம்

இன்றைய பலன்

மார்கழி மாதம் 12ம் திகதி
வியாழக்கிழமை
27-12-1979)

மேடம்: சொந்தவரவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும். வாழ்விலும் சந்தோஷமான சம்பவமும் இடம் பெறலாம். சாந்த குணம் சிறப்பைத் தேடித் தரும்.

இடபம்: வேண்டிய ஒருவரைப் பகைக்க நேரிடலாம். வாழ்க்கையும் சுமை பாகத் தோன்றும். எதையும் சமாளித்து நடக்கவும்.

மிதுனம்: ஆராய்ச்சியாளர்களுக்குப் பொன்னான தினம். மேலான வாழ்வும் கிட்டும். முன்னேற வழியும் உண்டு. மாதுருவழிப் பெருமையும் உண்டு.

கடகம்: மாணவர் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம். புதிய முயற்சிகள் கைகூடும். தொழிலிலும் முன்னேற்ற முண்டு.

சிங்கம்: உடன்பிறந்தவர்களாலேயே தொல்லைகள் தோன்றும். சிலருக்கு அன்னிய வாசமும் ஏற்படலாம். கடமையாற்றுமிடத்தில் சச்சரவுகளைத் தவிர்த்துக் கொள்ளவு.

கன்னி: வாழ்வும் பயணத்தில் வளமான திருப்பமும் பாவையர் களிப்புறுவர். தொழிலும் சிறப்படையும்.

துலாம்: மேலதிகாரியின் கண்டனங்களுக்கும் இலக்காவீர்கள். எதிர்பாராத விரையங்களும் ஏற்படும். உடல்நலனைப் பேணி நடக்கவும் தக்க தினம்.

விருச்சிகம்: இதமான வாழ்வுக்கு பெரியோர்களின் ஆதரவும் உண்டு. தெய்வ வழிபாட்டில் ஆர்வம் பிறக்கும்.

தனுசு: தொழில் யாத்திரைகள் இருப்பிடமாற்றத்திற்கு வழிகோலப்படலாம். குடும்பசுகமும் உண்டு. கல்வியிலும் ஆர்வம் பிறக்கும் சுபதினம்.

மகரம்: எதையும் சிறப்பாகச் செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். மக்களாலும் மகிழ்ச்சியுண்டு. எதிர்பாராத வரவுக்கும் இடமேற்படலாம்.

கும்பம்: உடமை பறியும் இடத்தில் தொல்லைகள் தோன்றும். செலவினங்களைக் கட்டுப்படுத்தவும். குடும்பம் பிணியுத் தூக்கலாம் பொறுமை நன்று.

மீனம்: விடிவதற்குக் நிகழ்ச்சியொன்று இடம்பெறலாம். குணவதியொருத்தியின் [illegible] இடமுண்டு. எதிலும் கவனம் செலுத்தி நடக்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

RIO Jaffna Phone: 7887
Daily 4 Shows
CRAZY BOYS ARE BACK in
Hong Kong With Love

உலக சாதனைப் புத்தகத்தில் ஸ்ரீஸ்காந்தராஜா

(யாழ்ப்பாணம்)

யாழ் வைத்தீஸ்வரா கல்லூரி மாணவன் வ. ஸ்ரீகாந்தராஜாவின் ([illegible]) ஒற்றைக்கால் உலக சாதனை, சர்வதேச புகழ்பெற்ற சாதனை (லண்டன் சஞ்சிகையான 'கின்னஸ்' ஸில் வெளிவந்துள்ளது!

பதினாறு வயது மாணவனான வ. ஸ்ரீஸ்காந்தராஜாவின் ஒற்றைக்கால் சாதனை, 'கின்னஸ்' புத்தகத்தில் இடம் பெற்றுள்ளதன் மூலம், இவரது சாதனை உலகப் புகழ் பெற்றதாக இப்பொழுது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஸ்காந்தராஜா, இவ்வருடம் மே மாதம் 27-ம் திகதி காலை 8-03-மணிக்கு யாழ் கஸ்தூரியார் வீதியிலுள்ள [illegible] ஆரோக்கியமாதா தேவஸ்தான மைதானத்தில் தமது ஒற்றைக்கால் சாதனையை ஆரம்பித்து அடுத்தநாள் பிற்பகல் 3-55க்கு முடித்து புதிய உலக சாதனையை ஏற்படுத்தினர். யாழ் மேயர் திரு இராஜா விசுவநாதன் கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ள, வைத்திய கலாநிதி ஜே. பி. இ. பிலிப் ஆரம்பித்து வைத்தார். யாழ் மெல்வர் ஆர் விளையாட்டுக் கழகத்தலைவர் திரு வி ரி சிவலிங்கம் பிரதம நடுவராகக் கடமையாற்றினர். இளைப்பாறிய திரு. டானியல் வேதநாயகம் பணிபுரிந்தார்.

வ. ஸ்ரீஸ்காந்தராஜாவின் ஒற்றைக்கால் சாதனை விபரம் தொடர்பாக உலக சாதனைப் புத்தகமான 'கின்னஸ்' ஆசிரியர் அலுவலகத்தின் சார்பாக திருமதி அமண்டா கிளார்க் அனுப்பிவைத்துள்ள பாராட்டுக்கடிதத்தில், வ. ஸ்ரீஸ்காந்தராஜாவின் ஒற்றைக்கால் சாதனை புதிய உலக சாதனையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டு, 'கின்னஸ்' சாதனைப் புத்தகத்தின் 26-வது பதிப்பில் (இப்பொழுது வெளிவந்து விட்டது) இவரது புதிய சாதனை விபரம் இடம் பெற்றுள்ளதென்றும், தமது பாராட்டுதலை ஏற்றுக்கொள்ளும்படியும் தெரிவித்துள்ளார்.

விசேஷவிலையில் ஒரு 'கின்னஸ்' புத்தகமும் வ. ஸ்ரீஸ்காந்தராஜாவுக்கு லண்டனிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

மக்கள் கடைக்கு பொருட்கள் வந்தன

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயிலுள்ள விற்பனை அபிவிருத்தி திணைக்கள மக்கள் கடைக்கு முறையாக மரக்கறி வகைகள் அனுப்பி வைக்கப்படுவதில்லை என்று மக்கள் செய்து கொண்ட புகாரையடுத்து விற்பனைத் திணைக்கள யாழ் மாவட்ட ஆணையாளர் இக்கடைக்குத் தேவையான மரக்கறிகளையும் தேங்காய்களையும் கொடுத்து அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்துள்ளார். கடந்தவாரம் அரிசி, தேங்காய் போன்ற பல பொருட்கள் இக்கடைக்கு வந்து சேர்ந்துள்ளன. (வ)

[illegible] (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00,
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி ஆர்—ஜெயலலிதா
தனிப்பிறவி
(புதிய பிரதி)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
மர்மயோகி

[illegible] வாரம்
REGAL (Jaffna) Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p.m.
GENE HACKMAN
in
French Connection II (Colour
குறிப்பு! உங்கள் இருதயம் பலவீனமானதா? ஏனெனில் இப்படத்தைப் பார்க்கும் அநேகர் மயக்கமடைகிறார்கள்

சந்தேக நபர் கைதானார்

(யாழ்ப்பாணம்)

சந்தேகத்திற்கிடமான முறையில் வீதியில் நடமாடிய ஒருவரைப் பொலிசார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியபோது, சந்தேக நபர் ஒரு ஐ. ஆர். சி என்று தெரியவந்ததுடன், இவரால் அண்மையில் வீடொன்று உடைத்துத் திருடப்பட்டதும் விசாரணையின்போது தெரியவந்ததாம்.

வல்வெட்டித்துறையில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிக்கொண்டிருந்த ஒருவரை வல்வெட்டித்துறை பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியபோது, சந்தேக நபர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரென்றும் இவரின் பெயர் அன்ரன் என்றும் தெரியவந்ததுடன் சமீபத்தில் இவரால் பருத்தித்துறையிலுள்ள வீடொன்று உடைக்கப்பட்டுக் களவாடப்பட்டதாகக் கூறப்பட்ட ரேடியோ ஒன்றையும் பொலிசார் கைப்பற்றினர்.

வல்வெட்டித்துறைப் பொலிசைச் சேர்ந்த சார்ஜன்ட் [illegible] சுந்தரநாயக்கா, ராஜா ஆகியோரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

(கோ)

முட்டை விலை ரூபா 1-50

(மன்னார்)

நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு மன்னார்ப் பகுதியில் முட்டைக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தற்போது 1 ரூபா 50 சதம் வரை முட்டை விற்கப்படுகிறது.

பனம்பொருள் அபிவிருத்தியில்

'30 ஆண்டு காலமாக கவனம் செலுத்தப்படவில்லை'

கருத்தரங்கில் 'அமிர்' கருத்து

(யாழ்ப்பாணம்)

"இந்நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்து 30 ஆண்டுகள்வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இயற்கைச் செல்வமாகிய பனம்பொருளை அபிவிருத்திசெய்ய எவ்வித முயற்சியும் எடுக்கப்படாதது கவலைக்குரியதாகும்"

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் பனந்தொழில் அபிவிருத்திக் கருத்தரங்கை குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்த எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

பனம்பொருள் அபிவிருத்திச்சபை பதில் தலைவர் திரு எம். கனகசூரியர் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு அமிர்தலிங்கம் மேலும் கூறியதாவது:

"நமது நாடு ஆயிரமாயிரம் ஆண்டுகளாக சுதந்திரத்துடன் பூரண பலனைப் பெற்று வாழ்ந்த நாடு. அந்நியர் ஆட்சிக்காலத்தின்பின் நமது நாட்டுச் செல்வத்தை பயன்படுத்தாததுதான் பொருளாதார வாழ்வின் சீர்கேடாகும். எங்கள் நாட்டு செல்வத்தை விட்டு தென்னிலங்கையின் பொருட்களில் தங்கி நிற்பதே இதற்குக் காரணமாகும்"

சென்ற ஆட்சியின்போது அமைச்சர் கொல்வின் ஆர். டி. சில்வா, நீதிஅரசர் சிவசுப்பிரமணியம் தலைமையில் பனம்பொருள்பற்றி ஆராய ஒரு சபையை நிறுவினர். இச்சபை சமர்ப்பித்த அறிக்கை இன்னும் அமுல் செய்யப்படவில்லை. நடவடிக்கை எடுக்கப்படாமல் மூலையில் போடப்பட்டுள்ளது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்தபின் பெருந்தோட்ட தொழில் அமைச்சர் திரு எம். டி. எச். ஜெயவர்த்தன பனம்பொருள் அபிவிருத்திச் சபையை அமைக்க நடவடிக்கை எடுத்தார். இதற்காக இந்தச்சந்தர்ப்பத்தில் அமைச்சருக்கு தமிழ்மக்கள் சார்பில் பகிரங்கமாக நன்றி கூறுகிறேன்.

கலந்து ஆலோசித்தார்

பனம்வளத்தால் பயன்பெறுவோர் எமது மக்கள் என்பதை அறிந்த அமைச்சர், இக்குழுச்சபை நிறுவும்போது எங்களுடன் கலந்து ஆலோசித்தார், நாம் எதிர்க்கட்சியினராக இருந்தும் அவர் ஜனநாயக பண்பை அறிந்திருந்தார்.

முதல்வருடம் திரு நித்தியானந்தன் தலைவராக பணிபுரிந்தார். மனவிருப்பத்தை நிறைவேற்ற அவரால் வேலைசெய்ய முடியாமல் போய்விட்டது.

10 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்குச் சென்றபோது பனம்பொருள் அபிவிருத்திபற்றி அறியும் வாய்ப்புக் கிடைத்தது. சுதந்திர இந்தியாவில் பனம்பொருளை பூரணமாகப் பயன்படுத்துகின்றனர். மட்டைக் குப்பு ஏற்றுமதிமூலம் தமிழ்நாடு 10 கோடி ரூபாவைப் பெறுகிறது. இன்று [illegible] பாவிக்கின்றனர்.

ஒவ்வொரு நாடும் இவ்வளம் முழுவதையும் பயன்படுத்தி அபிவிருத்திபெற வேண்டும். [illegible] முதல்வன் பனை. இது பயிர் தண்ணீர் ஊற்றி வளர்க்கத்தேவையில்லை. இதனை நாம் பூரணமாகப் பயன்படுத்த வேண்டும். இதனை சரியான முறையில் பயன்படுத்தும்படி அபிவிருத்திச்சபையை தமிழ் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எரிபொருளுக்கு மதுசாரம்

பருத்தித்துறை எம்.பி திரு கே. துரைரத்தினம் கூறியதாவது: "மூன்று 5 வருடங்களில் பெற்றோலின் விலை 100 ரூபாவாக அதிகரித்துவிடும். ஆகையால் காலந் தாமதியாது மதுசாரத்திலிருந்து எரிபொருள் தயாரிக்க முயலவேண்டும். அதிலிருந்து தயாரிக்கப்படும் எரிபொருள் மூலம் வாகனங்களை ஓட்டமுடியும்.

கொழும்பு போவதைத் தவிர்க்கவேண்டும் என்று இங்கு கூறப்பட்டது. நிச்சயமாக இது தவிர்க்கப்படவேண்டும். இன்று இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காகவே கொழும்பிற்குப் படையெடுக்கிறார்கள். அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டால் இந்நிலைமை மாறும். நம் மூலவளங்களைப் பயன்படுத்தவேண்டும். இதன்மூலம் பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கலாம்.

பனை வடக்கு கிழக்கிலும், அம்பாந்தோட்டைப் பகுதிகளிலும் காணப்படுகிறது. வடமராட்சியில் பனையை நம்பி வாழும் மக்கள் நிறைய இருக்கின்றார்கள். மக்கள் மலேசியா, வெளிநாடுகளுக்குச் சென்றதால் பழைய வாழ்க்கை முறையை மறந்துவிட்டார்கள். நான் 66க்கு ஆண்டு ஆட்சிமன்றத்தில் பனையை ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தேன்.

தவறணைகளில் பனங்கள்

தவறணைகளில் சுத்தமான பனங்கள் இருப்பதென்பது பொய். மிச்சக்கள்ளை 'மிக்ச'ராக்கியே விற்பனை நடக்கிறது. பனங்கள் என்பது கிடையாது. பனங்கள் விரும்புகிறவர்களுக்கு நல்ல கள்ளையே கொடுக்கவேண்டும், சாராயம் குடிக்கிறவர்களுக்கு நல்ல சாராயம் கொடுக்கவேண்டும்.

தமிழ்நாடு பனம் மட்டைப்பு உற்பத்திமூலம் பல கோடி ரூபாய்களைப் பெறுகிறது. நாமும் அப்படி பெறமுடியும்.

வடமராட்சியில் 400 ஏக்கரில் பனை உற்பத்தி செய்யப்படவிருக்கிறது. ஒரு ஏக்கரில் 400 விதைகளை நாட்டத்திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நிலம் 95 வீதம் அரசினுடையது.

கொழும்பு உத்தியோகத்தர்களின் சம்பளத்துக்கு மேலாக பனைமூலம் வருமானம் பெறலாம். வடக்கில் சீனியின் [illegible] குறைந்ததால் பனங்கட்டித் தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா நடத்துகின்றது. தெற்கில் [illegible] திறப்பு விழா நடத்துகின்றது.

"தமிழ் உறுப்பினர்களும் உதவவேண்டும்"

பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு எம். கனகசூரியர் கூறியதாவது:

அந்நியர் ஆட்சிக்காலத்தில் பனம்பொருள் உபயோகம் குறைந்திருந்தது. உணவுப் பொருட்கள் இறக்குமதியே இதற்குக் காரணம். 90 ஆண்டுகளுக்கு முன் வடபகுதியிலிருந்து பனம்பொருள் ஏற்றுமதிசெய்யப்பட்டது. இது தமிழர்களுக்கு பனந்தரும்பு என்றும் தெரியாது. பனம்பொருள் அபிவிருத்திக்கு இந்த வருடம் அரசு தரும் பணம் போதுமானதல்ல. தமிழ்உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் உதவவேண்டும்.

பனை நூற்றாண்டுகாலம் நின்று நிற்பதுபோல் தமிழர் தலைவர் திரு அமிர்தலிங்கமும் நூற்றாண்டுகாலம் வாழ்ந்து தமிழினத்தைப் பாதுகாக்க வேண்டும். (ஈ)

சிரமதானத்தின்மூலம் கச்சதீவில் பாதை

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு உற்சவத்தின்போது அத்தீவுக்கு வரும் யாத்திரிகர்களின் வசதிக்காக சிரமதான முறையில் 3000 அடி நீளமான பாதையொன்று 15 அடி அகலத்தில் வெட்டப்பட்டுள்ளது.

கடந்தவாரம் கச்சதீவு சென்ற இளைஞர்களடங்கிய சிரமதான அணி இப்பாதையை இருநாட்களில் அமைத்துள்ளது. இக்குழுவில் பொதுசனத்தொடர்பு அதிகாரி திரு. எஸ். சண்முகசுந்தரம், பொதுசனத் தொடர்பு காரியாலய உதவியாளர் திரு. எஸ். சந்தசாமி, வேலணை நிறைவேற்றுப் பொறியியல் தொழில்நுட்பவியலாளர் திரு எஸ். மகாலிங்கம் உட்பட சிறைச்சாலை அதிகாரிகள், சிறைக்கைதிகள், சிரமதான அணியினர் உட்பட பெருந்தொகையினர் சென்றிருந்தனர்.

யாழ் அரசாங்க அதிபர் திரு யோகேந்திரா துரைசுவாமியின் பணிப்பின்பேரில் இக் குழு கச்சதீவு சென்றது.

அடுத்த ஆண்டு ஜனவரிமாத நடுப்பகுதியில் கச்சதீவு செல்லும் ஆலய உற்சவத்தை ஒழுங்குபடுத்தலுடன் யாத்திரிகர்களின் வசதிக்காக பல வசதிகளை செய்யவிருக்கின்றது.

சேவை மனப்பான்மை கொண்ட சிறைக்கைதிகளை கச்சதீவு சிரமதானபணிக்கு தேர்ந்தெடுத்து அனுப்பிவைக்க யாழ் மாவட்ட சிறைச்சாலை ஆணையாளர் திரு. பி. [illegible] இக்குழுவினர் நன்றிதெரிவித்துள்ளனர். இப்பாதை கோவிலில் இருந்து மேற்குப் பக்கமாக இராமேஸ்வரம் யாத்திரிகர்கள் வந்திறங்கும் இறங்குதுறைவரை அமைக்கப்பட்டுள்ளது. (கெ)

மட்டுநகரில்

தாக்குதலுக்குள்ளான பொலிஸ்கான்ஸ்டபிள்

(மட்டுநகர் நிருபர்)

பிரபல வேடி கந்தப்போடி என்பவரினால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் மட்டக்களப்பு பொலிஸ் கான்ஸ்டபிள் திரு த. துரைராசா உறவினர்களின் வேண்டுகோளின்பேரில் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரிக்கு மாற்றம்செய்யப்படலாம் எனத்தெரிகிறது.

திரு துரைராஜா தற்போது எழுந்து நடமாடுகின்றார். பொலிஸ்நிலைய அதிகாரிகள் அடிக்கடி பார்வையிட்டுவருகின்றனர். ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் இவருக்கு பணிவிடை செய்து கொண்டிருக்கின்றார்.

யாழ்ப்பாணம் கரவெட்டியைப் பிறப்பிடமாகக்கொண்ட துரைராஜாவின் நிலையை உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் திரு த. இராஜலிங்கம் அடிக்கடி தொலைபேசியில் பொலிஸ்நிலைய அதிகாரிகளுடனும், வைத்தியசாலை அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு அறிந்துவருகின்றார். துரைராஜாவுடனும் தொலைபேசியில் தொடர்புகொண்டு பலதடவை பேசினார். திரு இராஜலிங்கம் நேரில் பார்வையிடவும் வரவுள்ளார்.

புங்குடுதீவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொள்ளையடிக்கப்பட்ட நகைகளை வாங்கியதாக தர்மலிங்கம் அன்னலட்சுமி என்ற பெண்ணையே கைது செய்துள்ளனர்.

கடைசியாகக் கிளிநொச்சியில் வைத்துப் பொலிசாரால் கைது செய்யப்பட்ட இளையதம்பி கணேசமூர்த்தி அல்லது பூராசா என்பவர் தற்கொலை செய்ய முற்பட்டபோதே பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

ஏற்கனவே கைது செய்யப்பட்ட செல்லன் இராசரத்தினம், செல்லன் சதாசிவம், சின்னத்துரை செல்வராசா, அரியபுத்திரன் பாலசுப்பிரமணியம், கோ. குணசிங்கம், செல்லன் சதாசிவம், ஆகியோருடன் கடைசியாகக் கைது செய்யப்பட்ட இளையதம்பி கணேசமூர்த்தி அல்லது பூராசா ஆகியோர் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களென்றும் இவர்கள் பாவற்குளம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் தலைமறைவாகத் திரிந்தபோது பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பூராசா என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவரால் நெடுந்தீவிலுள்ள வீடொன்றில் வைக்கப்பட்ட புங்குடுதீவில் திருடப்பட்ட 5 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் கைக்கடிகாரம் ஒன்றும் மீட்கப்பட்டது.

புங்குடுதீவில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் 15 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிசார் தெரிவித்தனர்.

இக்கொள்ளை சம்பந்தமாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஐவர் அடையாள அணிவகுப்பிற்கு நிறுத்தப்பட்டனர். அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்ட ஐவரில் நால்வரை பொருட்களின் உரிமையாளரான திருமதி முத்துவேலு சிவக்கொழுந்து அடையாளம் காட்டினார். இவர்களில் ஒருவரை வீட்டுப் பணியாள் அடையாளம் காட்டினார்.

இக்கொள்ளை சம்பந்தமான அடுத்த அடையாள அணிவகுப்பு 3-1-80ல் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது. (கோ)

சூறாவளி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனதாவின் பக்கம் சாயக்கூடும் என்றும் கூறப்படுகின்றது.

இப்போதைய நிலையில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்கும், ஜனதா கட்சிக்குமிடையே பெரும்போட்டி ஏற்பட்டிருப்பதாக பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

இன்னும் சில தினங்களில் எந்தக் கட்சி பதவிக்கு வருவது என்பதுபற்றி இந்திய மக்கள் முடிவு செய்துவிடுவார்கள். திருமதி இந்திராகாந்தி இப்போது தமிழ்நாட்டில் இரண்டு நாட்கள் தங்கி தீவிர பிரசார வேலைகளில் ஈடுபட்டுவருகிறார்.

கடந்த தேர்தலில் தோல்வியுறுவதற்கு காரணமாய் இருந்த அவசரகால நிலைமையின்போது இடம்பெற்றுவிட்ட சம்பவங்களுக்காக திருமதி காந்தி வருத்தம் தெரிவித்திருப்பதும் மீண்டும் அப்படி ஒரு நிலைவர அனுமதிக்கப்போவதில்லையென்று உறுதிகூறியிருப்பதும் இந்தியமக்களை திருமதி இந்திரா காந்தியின்பால் அனுதாபம் கொள்ளச் செய்திருப்பதாக அவதானிகள் கருதுகிறார்கள்.

மாங்குளத்தில் மத்திய சந்தை

(புளியங்குளம்)

மாங்குளம் நகரத்தின் புதிய மத்திய சந்தை அடுத்தஆண்டு தைமாதம் முதல் திறந்துவைக்கப்படவுள்ளது. இதற்கு முல்லைத்தீவு பாராளுமன்ற உறுப்பினர் திரு சே. மா. செல்லத்தம்பி ரூபா 46 000 பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கினார்.

இவ்வேலைக்கு மாங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்று செய்துள்ளதாகத் தெரிகிறது.

இரு நீதிபதிகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட நீதிபதி திரு. ஜே. ஜி. ஆசீர்வாதம் ஜனவரி மாதம் கேகாலைக்கு மாவட்ட நீதிபதியாக இடமாற்றம்பெறுகிறார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு கே. பாலகிட்ணர் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம்பெற்றுள்ளார். (வெ

மரண அறிவித்தல்

ஜனாப் பி. அப்துல் கரீம்

யாழ்ப்பாணம் 33/5, மின்சாரநிலைய வீதியைச் சேர்ந்தவரும், திருகோணமலை கரீம் கூல் ட்ரிங்ஸ் உரிமையாளருமான ஜனாப் பி. அப்துல் கரீம் காலமானார். இவர் அசானி உம்மாவின் கணவரும், சுபுஹான் (மோட்டார் சைக்கிள் ஒஷ்வின் தயாரிப்பாளர், 18, ஜும்மா மொஸ்க் லேன் யாழ்ப்பாணம்) சக்கரியா, ஜமால் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரது ஜனாஸா நல்லடக்கம் இன்று வியாழக்கிழமை (27-12-79) காலை 10மணிக்கு கோட்டடி மையவாடியில் நடைபெறும்.

4479

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் மாதம் 27ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No; QD/9848/78 The Eelanadu P B No, 49; Telegram Eelanadu Phone: 399;